உரைமீதான விவாதத்தைத் தள்ளி வைத்து, அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அதுகுறித்து ஏற்கெனவே பதில் கொடுத்தாகிவிட்டது, உட்காருங்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் போரினால் அப்பாவித் தமிழ் மக்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் போரினால், அங்கு வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவது மற்றும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசி பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், மற்றும் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. சுதர்சனம், திருமதி டி. யசோதா, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. அருள் அன்பரசு, திரு. து. அமரமூர்த்தி, திரு. கரி. இராமசாமி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்,

2009 ஜனவரி 23] [பேரவைத் தலைவர்]

திரு. போ. கோபாலன், திரு. சு. சிவராஜ், திரு. எம்.ஆர். சுந்தரம், திரு. ராம. சுப்புராம், திரு. மா. தண்டபாணி, திரு. ஆர்.எம். பழனிசாமி, திரு. என்.ஆர். ரெங்கராஜன், திரு. மா. ராஜசேகரன், திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. கு. ஜெயக்குமார், திரு. கு. ஹசன் அலி, திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், திரு. இரா. இராம்பிரபு, திரு. எஸ். ஜெயபால் மற்றும் திரு. கே. கோபிநாத் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. கி. ஆறுமுகம் ஆகியோரும், இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. வே. மாரிமுத்து, திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜாண் ஜோசப், திருமதி ரா. லீமா றோஸ் மற்றும் திருமதி ஜி. லதா ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. எஸ். இராசசேகரன், திரு. சு. குணசேகரன், திருமதி பி. பத்மாவதி, திரு. கே. உலகநாதன் மற்றும் திரு. தி. இராமசாமி ஆகியோரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. து. ரவிக்குமார் அவர்களும், விதி 56-இன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். இந்தப் பிரச்சினை குறித்துப் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்தின்மீது ஒருமனதாகப் பேசும்படியும், உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் மற்ற கட்சிகள்மீது குறை கூறிப் பேசி, பிரச்சினையை வேறுவகையில் திசை திருப்பிட வேண்டாமென்றும், உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் அவர்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of clarification....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார் அவர்களுக்குப் பேச அனுமதி கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். ஏதாவது பிரச்சினை என்றால் பிறகு பேசலாம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள், எனக்குக் கேட்கிறது.

[2009 ஜனவரி 23

முற்பகல் 9-35

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு தாங்கள் அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பத்திரிகைச் செய்திகள் வாயிலாகவும், தொலைக்காட்சிகள் வாயிலாகவும், இன்றைக்கு இங்கே ஒரு தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிய இருக்கிறார்கள் என்ற செய்தி வந்தது. அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்ததற்குப் பின்னாலே, மற்றவர்களைப் பேசச் சொல்வது உகந்ததாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவீர்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே இந்த subject-க்குள்ளே controversy எதுவும் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். திரு. ரவிக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள், அதை Special Mention-ஆக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இரண்டும் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். திரு. ரவிக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்குத் தாங்கள் அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகைச் செய்திகள் வாயிலாகவும், தொலைக்காட்சிகள் வாயிலாகவும் இங்கே ஒரு தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிய இருக்கிறார்கள் என்று இன்றைக்குச் செய்தி வந்தது. அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேச உகந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். அதற்கான வாய்ப்பைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், பேசுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே தமிழ் மக்கள்.... (குறுக்கீடுகள்)

2009 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், இந்த subject-ல் controversy எதுவும் வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ரவிக்குமார், பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதை Special Mention-ஆக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ரவிக்குமார், பேசுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே, தமிழ் மக்கள் படுகிற அவதிகளையும், சந்தித்து வருகிற கொடுமைகளையும் இந்த நாடு நன்கு அறியும். சிறப்பு வாய்ந்த இந்த மாமன்றத்திலே கடந்த கூட்டத் தொடரிலும், இங்கேயிருக்கிற அரசியல் கட்சிகளெல்லாம் ஒருமனதாக இணைந்து, ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்மானத்தை இயற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்து, அதை நாம் மையப் பேரரசிற்கு அனுப்பியிருக்கின்றோம். இன்றைக்கு, உலகம் எங்கும் வாழ்கிற தமிழ் மக்களெல்லாம் வேண்டுகிற கோரிக்கை ஒன்றே ஒன்றுதான். இலங்கையிலே நடைபெறுகின்ற போர், நிறுத்தப்பட வேண்டும்; அங்கே அப்பாவி மக்கள் கொல்லப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்; அங்கே ஓர் அமைதித் தீர்வு காணப்பட வேண்டுமென்பதுதான் அனைவரது வேண்டுதலாக, விருப்பமாக இருக்கிறது. இதற்காக, நமது நாட்டு மக்கள் திரண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்ததோடு மட்டுமல்லாமல், போராட்டங்களையும் நடத்தினோம். மனிதச் சங்கிலியாக மழையில் நனைந்து அணி வகுத்தோம். கடும் பனியிலும் நம்முடைய முதல்வர் அவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று, மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து, முறையிட்டார்கள். இவ்வாறு தமிழக மக்களுடைய உணர்வு பலமுறை வெளிக்கொணர்ந்து காட்டப்பட்ட பிறகுங்கூட, அங்கே ஓர் இன அழித்தொழிப்புப் போர் தொடர்ந்துகொண்டு இருப்பது, தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல், உலக நாடுகள் அனைவரது கவலைக்கும் உரியதாக மாறியிருக்கிறது. இன்றைக்கு இங்கிலாந்து பாராளுமன்றத்திலேகூட, இதைப்பற்றி விவாதிக்கப்பட்டு, அங்கே போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. இங்கிலாந்து பிரதமர் அவர்கள், பிரான்ஸ் நாட்டுப் பிரதமரையும், ஜெர்மன் நாட்டு அதிபரையும் கலந்தாலோசித்து, அங்கே போர் நிறுத்தம் செய்வதற்கு முன்முயற்சி எடுப்பேன் என்று தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு, ஜப்பான் நாடு தனது தூதுவரை அங்கே அனுப்பவிருக்கிறது என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆக, உலக நாடுகள் எல்லாம் இதிலே

[திரு. து. ரவிக்குமார்] [2009 ஜனவரி 23

கவனம் செலுத்துகிற நேரத்திலே நம்முடைய இந்தியப் பேரரசும் இதிலே தலையிட்டு அங்கே போர் நிறுத்தத்தை அமல்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்பதுதான் நம்முடைய கோரிக்கை. இன்றைக்குப் பல்வேறு மாவட்டங்களில் இருந்த தமிழ் மக்கள் எல்லாம் கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் எல்லாம் இராணுவத்தினுடைய பீரங்கித் தாக்குதல்களுக்கும், விமானத்திலிருந்து வீசப்படுகின்ற கொத்தணிக் குண்டுகளுக்கும் பயந்து, அஞ்சி ஒளிந்து முல்லைத் தீவிலே உள்ள காடுகளிலே மரங்களின்கீழ் அநாதைகளாகப் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 5 இலட்சம் மக்கள் வெறும் 40 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலே--இன்றைக்கு ஒரு திறந்தவெளிச் சிறையாக அது மாறி--அவர்கள் அங்கே அஞ்சி, நடுநடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்மீது தொடர்ந்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. விமான குண்டுவீச்சுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தினமும் பெண்கள், குழந்தைகள் என அப்பாவி மக்கள் அங்கே குண்டுவீச்சுகளுக்கு ஆளாகி சிக்கி, சிதறி, சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே நடந்துகொண்டிருக்கிற போரிலே இப்படி அப்பாவி மக்கள் பலியாகக்கூடாது என்பதை அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒரே சர்வதேச அமைப்பான செஞ்சிலுவைச் சங்கமும் இன்றைக்கு உலகத்தின் கவனத்திற்கு எடுத்து முன்வைத்திருக்கின்றது. அங்கே மாட்டிக்கொண்டிருக்கின்ற அந்தத் தமிழர்களுக்கு உணவுப் பொருட்களோ, மருந்துகளோ சரியான முறையிலே கிடைக்கமுடியாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

*முற்பகல் 9-40*

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்முயற்சி எடுத்து, தமிழக மக்களெல்லாம் ஆதரவோடு நிதி உதவி அளித்துத் திரட்டித் தந்த தொகையிலே, நாம் சேகரித்து அனுப்பிய உணவுப்பொருட்கள்கூட தமிழ் மக்களுக்கு அங்கே முழுமையாகக் கிடைக்காமல், சிங்கள இராணுவ வீரர்கள் அதிலே பல மூட்டைகளைப் பிரித்து அவற்றை எடுத்துக்கொண்ட செய்திகள்கூட வந்தன. இந்த நிலையிலே அந்த மக்களுக்கு உணவுப் பொருட்களும், மருந்துகளும் வழங்கப்படவேண்டும் என்று பல்வேறு சர்வதேச அமைப்புகள், **Amnesty International** போன்ற மனித உரிமை அமைப்புகளெல்லாம் கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கின்றன.

2009 ஜனவரி 23] [திரு. து. ரவிக்குமார்]

குண்டுவீச்சிலே பாதிக்கப்படுகிற தமிழர்கள் மருத்துவமனைகளுக்குச் செல்லமுடியாதவண்ணம் தடுக்கப்படுகிறார்கள். அவர்களுக்குச் சரியான மருத்துவ வசதிகளும் கொடுக்கப்படவில்லை. முல்லைத் தீவிலே இருந்த ஒன்றிரண்டு மருத்துவமனைகளும்கூட குண்டுவீசித் தகர்க்கப்பட்டிருக்கின்றன. இதனால் அங்கே சாகிறவர்களைக்கூட கௌரவமான முறையிலே சடங்குகள் செய்து அடக்கம் செய்ய முடியாத ஓர் அவலச் சூழல் நடந்துகொண்டிருக்கின்றது. கொல்லப்படுகிற அப்பாவித் தமிழர்கள் எல்லாம் பிணங்களாக வெட்ட வெளியிலே காக்கை, கழுகுகளுக்கு இரையாகிக்கொண்டிருக்கிறார்கள். இது ஏதோ ஈழத் தமிழர்களுக்கு நேர்ந்த ஒரு அவலம் மட்டுமல்ல; உலகமெங்கும் ஏறத்தாழ 110 நாடுகளிலே பரவி வாழ்கின்ற தமிழினம் இன்றைக்கு இப்படி ஒரு அவலச் சூழலை எதிர்கொள்வதா என்பதுதான் ஒவ்வொரு தமிழனின் மனதிலும் ஒலித்துக்கொண்டிருக்கிற கேள்வியாக இருக்கிறது. இந்த நிலையை மாற்றவேண்டுமென்று சொன்னால், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக மட்டுமல்லாமல், உலகமெங்கும் வாழ்கின்ற தமிழினத்தின் தலைவராகவும் விளங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் முன்முயற்சி எடுத்து இதிலே குரல் எழுப்பினால்தான், இந்த அவல நிலை தடுக்கப்பட முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஓர் உண்மையாகும். அதனால்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே நாம் நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தும்விதமாகத் தொடர்ந்து குரல் எழுப்பி, இந்தப் போருக்கு, மனிதாபிமானமற்ற இந்தத் தாக்குதல்களுக்கு, இலங்கையிலே நடந்துகொண்டிருக்கின்ற இனப் படுகொலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம். இன்றைக்குத் தமிழினமே அழிந்துகொண்டிருக்கிறது; உலகமே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. இது சரியா, இது நியாயமா என்ற ஓர் அவலக் குரலை எழுப்புகின்ற நிலையிலே நாம் இருக்கின்றோம்.

மத்தியப் பேரரசு நம்முடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு உடனடியாக அங்கே ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் மீண்டும் மீண்டும் நாம் வலியுறுத்துகிற வேண்டுகோள். இதற்காக நம்முடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பேச வேண்டியிருக்கிறது. அதனாலே சுருக்கமாகப் பேசுங்கள்.

[2009 ஜனவரி 23

**திரு. து. ரவிக்குமார்:** உடனடியாக மத்திய அரசு அங்கே அனுப்பி வைக்க வேண்டும். இதிலே முன்னனுபவம் உள்ள, இதற்கு முன்பு பலமுறை ஈடுபட்டு அனுபவம் வாய்ந்த, இன்றைக்கு உள் துறை அமைச்சராகவும், உயர்ந்த பொறுப்பு வகிக்கின்ற மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களையும்கூட இதிலே ஈடுபடச் சொல்லி நாம் குரல் எழுப்பலாம். அவர்களும் இந்தப் பிரச்சினையை ஏற்கெனவே மறைந்த பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள் இருந்தபோது கையாண்டவர்கள்தான். ஆக, ஏதோ ஒரு விதத்திலே மத்திய அரசு நடவடிக்கை எடுத்து, இந்தப் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அங்கே ஓர் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழ் மக்கள் சமத்துவத்தோடு, சுய மரியாதையோடு, சம உரிமையோடு வாழ்வதற்கான ஏற்பாட்டினை இந்தியப் பேரரசே முன்நின்று நடத்துவதற்கு முன்வர வேண்டும் என்கின்ற கோரிக்கையை வலியுறுத்தி மீண்டும் நமது பேரவையிலே ஒருமனதாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பிலே வலியுறுத்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொன்னபடி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சரி, சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய வேண்டுகோள் என்பது, இது சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற அடிப்படையிலே எடுத்துக்கொண்டு, பின்னாலே ஒரு தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட இருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, அந்தத் தீர்மானத்தின்மீதும் கருத்துகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும்; பத்திரிகைச் செய்தியில் வந்ததை வைத்து நான் சொல்கிறேன்.

2009 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, நான் தீர்மானத்தை இங்கு முன்மொழிவதாக இருந்து அறிவித்தபோதிலும்கூட, அதற்கு முன்பு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வந்திருக்கிற காரணத்தால், நீங்கள் எப்பொழுதும் கவன ஈர்ப்புக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பீர்கள் என்ற அளவில், என்னுடைய தீர்மானம் இப்போது பின்னுக்குத் தள்ளப்பட்டு, கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதிலாக நான் என்னுடைய தீர்மானத்தை இறுதியிலே இங்கு வழங்க இருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைத்தான் சொல்கிறார்கள், நானும் அதைத்தான் கேட்டேன். இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது எங்களுடைய கருத்துகளையெல்லாம் கேட்டுவிட்டு, திரும்ப நீங்கள் தீர்மானத்தைப் படிப்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. மேலும், இந்த அவையின்மூலமாக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனாலும், தீர்மானத்தினுடைய வாசகங்களைத் தெரிந்து அதன்மீதும் தேவையான கருத்துகளைச் சொல்லலாமே என்ற அந்த அடிப்படையிலேதான் நான் அப்படிக் கேட்டேன். இருந்தாலும், முதல்வர் அவர்களுடைய விளக்கத்தோடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலான என்னுடைய கருத்துகளை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இலங்கையிலே நடைபெறுகிற உள்நாட்டுப் போர் இப்போது இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகத்தான் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. சுமார் 5 இலட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டு, சாவின் விளிம்பிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். இந்த மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதுதான் ஒட்டுமொத்த தமிழர்களுடைய உணர்வாக இருக்கிறது. இந்த உணர்வுக்கு மதிப்பளித்து, உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தை நாம் இங்கே முன்மொழிந்திருக்கிறோம். குறிப்பாக இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினை என்று சொல்கிறபோது, மாண்புமிகு முதல்வர் அவர்களே பல கருத்துகளை வேதனையோடு வெளியிட்டிருக்கிறார்கள். 50 ஆண்டுக் காலத்திற்கு மேலாக இந்தப் பிரச்சினைக்காகப்

பல்வேறுபட்ட போராட்டங்களை நடத்தியிருக்கிறேன் என்று அவர்கள் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, இலங்கைப் பிரச்சினை என்பது 50 ஆண்டுக் காலத்திற்கும் மேலான போராட்டமாக இருக்கிறது என்பது மறுக்க முடியாத ஒன்று. அங்கே தமிழர்கள் அன்றைய காலக்கட்டத்திலிருந்து இன்றைய வரையிலும் தொடர்ந்து மிகப் பெரிய அளவிலே நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு, உயிர் பலிக்கும் ஆளாக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலைமைகளில் மாறுதல் காண வேண்டுமா, இல்லையா என்பதுதான் இப்போது இருக்கிற கேள்வி. தமிழகத்திலே இந்த உணர்வு நிலைகள் வருகிறபோதெல்லாம் பல்வேறு மாறுபட்ட கருத்துகள் வந்துவந்து வேறுவிதமாக திசை திரும்புகிறது என்ற கருத்தும் வந்துகொண்டிருக்கிறது. இதில் எந்தவிதமான திசை திருப்பலும் இருக்கக்கூடாது என்பதிலே நான் ஒத்த கருத்தைக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் இந்த அவையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து போராடி வந்திருக்கிறது, கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறது. சிலர்கூட ஏதோ இப்போதுதான் இதைப்பற்றி கம்யூனிஸ்ட்டுகள் பேசுகிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். 1954 ஆம் ஆண்டே எங்களுடைய ஒப்பற்றத் தலைவர் திரு. ஜீவா அவர்கள் இந்த அவையிலேயே இலங்கைத் தமிழர்கள் படுகிற இன்னல்களைப் பற்றி விவரமாகவே பேசியிருக்கிறார்கள். அதற்கான தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கொண்டுவந்து முன்மொழிந்தபோது, அதிலே மிகச் சிறப்பாகக் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே திராவிடக் கட்சிகளுடைய கருத்துகளை ஆதரித்து அன்றைக்குப் பேசியிருக்கிறார்கள். அப்படி அவர் பேசுகிறபோது பல்வேறு செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தமிழினம் அங்கே தாக்கப்படுகிறது; நசுக்கப்படுகிறது; அவர்களுக்கு உரிமை மறுக்கப்படுகிறது; அவர்களை விடுதலை செய்வதற்கும், அவர்களுக்குப் பாதுகாப்பும், அவர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கும் உரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று 1954 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதி இந்த அவையிலே எங்களுடைய தலைவர் திரு. ஜீவா அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நெருங்கிய சகோதரராக இருந்த திரு. ஜீவா அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். அப்படி அவர் பேசுகின்றபோது பல்வேறு கருத்துகளைச் சொல்கின்றார். அப்படிச் சொல்கின்றபோது இந்த உணர்வுகளை அன்றையதினமே வெளிப்படுத்தியிருக்கின்றார்.

2009 ஜனவரி 23] [திரு. வை. சிவபுண்ணியம்]

முற்பகல் 9-50

நம்முடைய சகோதரர்கள் அங்கே கஷ்டப்படுகின்றபோது, தமிழகத்திலே இருக்கின்றவர்கள் படுகின்ற கவலையைவிட, வேறு யாருக்கும் இருக்க முடியாது என்று அன்றையதினமே பதிவு செய்திருக்கின்றார். அதுதான் இன்றைக்கும் நம்முடைய உணர்வாக இருந்திருக்கின்றது. இதைத் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. வேறு யார் இதைப்பற்றி அக்கறை கொள்ள முடியும்? வட மாநிலத்திலே இருக்கின்றவர்கள் அக்கறை கொள்ள முடியுமா? தமிழினம் அங்கே அழிக்கப்படுகின்றபோது, தாக்கப்படுகின்றபோது, இங்கே இருக்கின்ற தமிழர்கள்தான் உணர்வுகொள்வார்கள்; அவர்கள்தான் கஷ்டப்படுவார்கள்; அவர்கள்தான் வேதனைப்படுவார்கள் என்பதை அன்றையதினமே வெளிப்படுத்தியிருக்கின்றார். அப்போது கருத்துகள் வந்தபோது, ஓர் ஆங்கிலப் பழமொழியைக் குறிப்பிட்டு, "மிதியடியைப் போட்டுக்கொள்பவர்களுக்குத்தான், அது எங்கே கடிக்கின்றது என்பது தெரியும்" என்று இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினை குறித்து பேசுகின்றபோது அன்றையதினமே பதிவு செய்திருக்கின்றார், மிதியடியைப் போட்டுக்கொள்பவனுக்கு அது எங்கே கடிக்கின்றது என்ற சிரமம், அவனுக்குத்தான் தெரியும் என்று அவர் குறிப்பிட்டுச் சொன்னதற்குக் காரணம், அங்கே தமிழர்கள் தாக்கப்படுகின்றபோது, இங்கே இருக்கின்ற தமிழர்களுக்குத்தான் அந்த வலி தெரியும் என்பதை 1954 ஆம் ஆண்டே இந்த அவையிலே அவர் பதிவு செய்திருக்கின்றார். அப்பொழுதே இந்தக் கருத்துகள் எல்லாம் வந்தபோது, அன்றைக்கு விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதிலே அப்போது எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பேசியபோது, குறிப்பாக மத்திய அரசைப் பற்றி ஒரு கருத்து வந்திருக்கின்றது. அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, நேருஜி அவர்கள் இதிலே உடனடியாக தலையிட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று பேசப்பட்டது. அப்போது ஆளுங்கட்சி என்ற முறையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், இதிலே மத்திய அரசையும், நேருஜி அவர்களையும் நீங்கள் இழுத்துப் பேசக்கூடாது என்று தடுத்து, அன்றையதினமே பேசியிருக்கின்றார்கள். அப்போது திரு. ஜீவா அவர்கள் அதைக் குறிப்பிட்டுச் சொல்கின்றபோது, நேருஜி அவர்களை இங்கே குறையாகச் சொல்லவில்லை; அவர்களிடத்திலே சொல்லாமல், மத்திய அரசிடம் மாநில அரசாங்கம் சொல்லாமல், என்ன செய்ய முடியும் என்பதை அப்போது பதிவு செய்கின்றபோது சொன்னார்கள்.

அப்போது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் குறுக்கிட்டபோது, அந்தக் கருத்துக்கு வலுவாக திரு. ஜீவா அவர்கள் பேசியபோது, 'தெய்வ நம்பிக்கை உள்ள திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு நான் ஒரு கருத்தைச் சொல்கின்றேன்' என்று சொல்லிவிட்டு, தாயுமானவர் பாடிய பாடலை குறிப்பிட்டுச் சொல்கின்றார்கள்;

"வாயார உண்டபேர் வாழ்த்துவதும், நொந்தபேர்
வைவதுவும் எங்கள்உலக வாய்பாடு"

என்று சொல்லியிருக்கின்றார்கள். உண்ட பிறகு வாழ்த்துவது, நொந்த பிறகு வைவது என்பது நடைமுறையில் இருக்கின்ற விஷயம்தான்; மக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றபோது வாழ்த்துவார்கள்; பாதிக்கப்படுகின்றபோது திட்டத்தான் செய்வார்கள்; அல்லது ஆட்சியை விமர்சனம் செய்யத்தான் செய்வார்கள்; இந்தப் பிரச்சினையின்மீது அப்படித்தான் கருத்துகள் வருகின்றன என்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று திரு. ஜீவா அவர்கள் சொன்னார்கள். அப்போது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சாமர்த்தியமாகச் சொன்னார்கள், 'தாயுமானவர் கடவுளைப் பற்றிதான் நொந்து சொன்னாரே தவிர, ஆட்சியாளர்களை நொந்துகொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை' என்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதாக அந்தச் செய்திகள் சொல்கின்றன. அப்போதுகூட தாயுமானவர் சொன்னது கடவுளைப்பற்றிதான் என்பதை ஒப்புக்கொண்டு, திரு. ஜீவா அவர்கள், எங்களுடைய கொள்கை 'கடவுள் இல்லை' என்ற காரணத்தால், நீங்கள்தான் ஆட்சியில் இருக்கின்றீர்கள்; ஆகவே உங்களைப் பார்த்துக் கேட்கின்றேன் என்று அன்றைக்குச் சொன்னார்கள். இப்படி இலங்கைத் தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் அன்றைக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதை நான் சொல்கின்றேன். ஆகவே, இந்த இலங்கைத் தமிழர்களுடைய துயரத்தைப்பற்றி 1954 ஆம் ஆண்டிலேயே எங்களுடைய தலைவர் திரு. ஜீவா அவர்கள் இந்த அவையிலே பதிவு செய்திருக்கின்றார்கள் என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நிலைமைகளையெல்லாம் பார்க்கின்றபோது, குறிப்பாக இந்த நிலைமைகள் கட்டங்கட்டமாக மாறி வந்து இன்றைய நிலையில் ஏற்பட்டிருக்கின்ற மாறுதல்கள், இக்கட்டான சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டதற்குரிய முயற்சியை ஏன். எடுக்கவில்லை? அன்றைக்குப் பல கட்டங்களைப்பற்றி, பல கருத்துகளைப்பற்றி இங்கே பேசப்பட்டன. இப்போது இருக்கின்ற நிலைமை என்ன?

2009 ஜனவரி 23] [திரு. வை. சிவபுண்ணியம்]

இந்த ஓராண்டுக்குள்ளேயே சுமார் 3 ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. பள்ளிக்கூடங்கள்மீதும், மருத்துவமனைகள்மீதும் குண்டு வீசுகின்ற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலே சர்வதேச விதிமுறைகளையே மீறிய செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யுத்தம் நடைபெறுகின்றது என்று சொன்னால், அதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் அந்த விதிமுறைகள் எல்லாம் மனித உரிமை மீறிய செயலாக மாற்றப்பட்டு, இலங்கையிலே அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள். இந்த நியாயத்தைத் தமிழர்கள் கேட்க முடியாதா? தமிழ்நாடு கேட்கக்கூடாதா? தமிழ்நாட்டிலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் கேட்க முடியாதா? இதைக் கேட்கின்றபோது, வேறுவிதமாக திசை திருப்புகின்ற முயற்சிகள் எடுக்கப்படுவது என்பதுதான் வேதனைக்குரியதாக இருக்கின்றது. ஆகவே, இந்தப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் நாங்கள் சொல்கின்றபோது இப்போது என்ன நிலைமை?

யாழ்ப்பாணத்திலே இராணுவத்தின் கட்டுப்பாட்டிலே இலட்சக்கணக்கான தமிழர்கள் இருக்கின்றார்கள். இவர்களை விடுதலை செய்யவில்லை என்று சொன்னால், கொத்தாக செத்துப் போவார்கள் என்பதைத் தவிர வேறு கதியே இல்லை. இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு என்ன முயற்சி? இப்போது ஒரு செய்தி வருகின்றது. சிறையிலே வைப்பதற்கு முயற்சிகளை எடுப்பதைப்போல, அங்கே பிரபலமான ஒரு செய்தி, வெள்ளை வேனிலே கடத்திச் செல்கின்றார்கள் என்று. வெள்ளை வேனில் கடத்திச் சென்றாலே கொன்றுவிடுவார்கள் என்று இலங்கையிலே பேசப்படுகின்ற செய்தி. அங்கே நித்தம் நித்தம் தமிழர்களை வெள்ளை வேனில் கடத்திச் சென்று கொன்றுகொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தி வந்துகொண்டேயிருக்கின்றதே, இதைப்பற்றி நாம் என்ன அக்கறை கொள்கின்றோம்? அதேபோன்று இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற தமிழர்களின் கதி என்னவென்று இதுவரையிலும் தெரியவில்லை. அதுபற்றி ஐக்கிய நாடுகள் சபைக்கும் தெரியாது; செஞ்சிலுவை சங்கத்திற்கும் தெரியாது. யாருக்குமே தெரியாத புதிராக இருக்கின்றதே, இதைப்பற்றி என்ன சொல்வது? இதற்கான முயற்சிகளை எடுக்கின்றபோது, மத்திய அரசு தலையிடுகிறேன், தலையிடுகிறேன் என்று சொல்கிறதே, மத்திய அரசு இதைப்பற்றியெல்லாம் கருத்துகளைக் கேட்டறிந்ததா? அதன்மீது

[திரு. வை. சிவபுண்ணியம்] [2009 ஜனவரி 23

தலையிடுவதற்கு முயற்சிகள் எடுத்ததா என்றால் இல்லை. அப்படியானால் இந்தத் ** (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள்....

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நான் ஏற்கெனவே யாரும் ஒருவருக்கொருவர் குறைசொல்லிப் பேசக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். எல்லோரும் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், யாரையும் குறை சொல்லிப் பேசக்கூடாது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நீங்கள் ஏன் அவ்வாறு பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ** பற்றிப் பேசாமல் வேறு யாரைப்பற்றிப் பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) ** இது இலங்கை மக்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களது உயிர்களைப் பாதுகாப்பதற்கும் உரிய ஏற்பாடாக அமையாது. (குறுக்கீடுகள்) ஆகவே, விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்திற்கு ** தயாராகிக் கொள்ளவேண்டும். ** நீங்கள் என்னவேண்டுமானாலும் பதில் சொல்லுங்கள். எனக்கு ஆட்சேபணையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், யாரும் யாரையும் குறை சொல்லிப் பேசக்கூடாது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ** என்று பெயர் சொன்னால் அதை நீக்குகிறேன் என்று சொன்னால், ** சட்டவிரோதமான வார்த்தையா? அவையில் பேசக்கூடாத வார்த்தையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) No, no. ** என்று தெரிவித்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2009 ஜனவரி 23]

**திரு. வை. சிவபுண்ணியம்:** ** பேசாமல் எதுவும் செய்யமுடியாது. சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையில் நீங்கள் தேவையில்லாத குழப்பத்தை உண்டாக்குகிறீர்கள். (குறுக்கீடுகள்) அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், subject-ஐ divert பண்ணாதீர்கள். குறிப்பாக உங்களிடம், மற்றக் கட்சியினர் யாரையும் குறைசொல்லிப் பேசாதீர்கள் என்று சொல்லியிருக்கிறேன். மீண்டும் தேவையில்லாத குழப்பத்தை நீங்கள் உண்டாக்குகிறீர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன தவறான கருத்துகளைப் பேசிவிட்டேன்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் என்ன தவறான கருத்தைச் சொல்லிவிட்டேன்? அவை மரபுக்குப் பொருந்தாத வார்த்தைகள் என்று எதையும் நான் சொல்லவில்லையே! அப்படித்தான் ** கட்சித் தலைவர் அவர்களோ, கொறடா அவர்களோ, துணைத் தலைவர் அவர்களோ சொன்னால் நான் பேசாமல் உட்கார்ந்துவிடுகிறேன். இப்படியே எல்லா விஷயங்கள்மீதும் கருத்துகளை எல்லோரும் பேசுவது என்று முடிவு எடுத்துக்கொண்டால் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்த அவையில் பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டிருக்கின்றன. ஏன் ஆத்திரப்படவேண்டும்? பதிலுக்குப் பதில் சொல்லலாமே? என்மீது குற்றம் சுமத்திப் பேசுங்கள். (குறுக்கீடு) அதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. மறுத்துப் பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிக நேரம் ஆகிவிட்டது. நான் சொல்கிறேன் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது சுருக்கமாகப் பேசி முடித்துவிடுகிறேன். *(குறுக்கிடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வார்த்தையை நீக்குகிறீர்கள் என்று தயவுசெய்து சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** சம்பந்தப்பட்ட வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ** இந்திய நாட்டு அரசாங்கத்தில்தான் நாம் இருக்கின்றோமா என்பதைத் தெளிவுபடுத்துங்கள். தமிழ்நாடு இந்தியாவில் இருக்கிறதா? இல்லையா? *(குறுக்கீடுகள்)* தமிழ்நாடு இந்தியாவில் இருக்கிறதா? இல்லையா? ** ஏற்றுக்கொள்கிறதா? இல்லையா? என்ன விளையாடுகிறீர்களா? *(குறுக்கிடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் உயர்ந்த நோக்கத்தோடு, இலங்கையில் நடக்கின்ற வன்முறைகளுக்கு, யுத்தத்திற்கு முடிவு கொண்டு வரவேண்டுமென்ற வகையிலே ஒரு தீர்மானத்தை முன்மொழிவதாகச் சொன்னார்கள். அந்தத் தீர்மானத்தின்மீது கூடுமானவரை எந்தக் கட்சியையும் குற்றம் சாட்டாமல் யாருடைய... *(குறுக்கீடுகள்)*

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2009 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அவர் சொன்னது ** என்பது குறித்த வார்த்தைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-00*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இல்லை, இல்லை. இதில் நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் பல மேற்கோள்களைக் காட்டியிருக்கிறார்கள். அந்த மேற்கோள்களுக்குப் பதில் சொல்வதற்காக நாங்களும் மேற்கோள்களை வைத்திருக்கிறோம். அதற்கு எங்களுக்கும் நீங்கள் அனுமதி தரவேண்டும் என்பதோடு நான் இதோடு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உரையை சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற கட்சி உறுப்பினர்களெல்லாம் பேச வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதைப்போலவே உலகில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக இஸ்ரேல், காசா மீது குண்டு மழை பொழிந்தது. இதைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபையிலிருந்தும், அனைத்து உலக நாடுகளும் கருத்து தெரிவித்ததற்குப் பின்னாலே இன்றைக்குப் போர் நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல, தொடர்ந்து இலங்கையிலே நடைபெறுவதை நிறுத்துவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டும். இதிலேயும் இந்திய அரசாங்கம் தலையிட்டுச் சொல்லியிருக்கிறது. காசாவிலே போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இலங்கை உட்பட சொல்கிறது. ஆனால், இலங்கையிலே இந்த நிலைமை நடைபெறுகிறதே இதற்குத் தீர்வு காணுவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். குறிப்பாக, ** ஆகவே இந்த அச்சம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள். திரு. ஞானசேகரன், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதைப்போலவே,. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், நீங்கள் subject-ஐப் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அங்கே MIG ரக விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) யார் கொடுத்த விமானம் என்று தெரியவில்லை என்று சொல்கிறார்கள். அதைப்போல இந்தியாவினுடைய ரேடார், இந்தியாவின் சார்பில் ரேடார் கருவிகளை இயக்கிய 3 பேர்கள் அங்கே சுடப்பட்டு பெங்களூரு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றுச் சென்றார்கள் என்ற செய்தி வருகிறது. அப்படியானால், இதில் இந்திய அரசுக்கு சம்பந்தம் இல்லையா? தொடர்பு இல்லையா? ஆதரவு இல்லையா? இதற்கு யார் விடை சொல்வது? இதற்குத் தீர்வு காண வேண்டும் என்று நான் நினைக்கிறேன். குறிப்பாக, இதையெல்லாம் பார்க்கிறபோது,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் முடித்து விடுகிறேன். ஒரு கருத்தை நான் பணிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புவது....(குறுக்கீடு) முடித்துவிடுகிறேன் அண்ணே. நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்துவிடுவார், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதன்மீது நான் பணிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த அவையிலே இதுவரையிலும் நாம் இரண்டு முறை தீர்மானங்களை

2009 ஜனவரி 23] [திரு. வை. சிவபுண்ணியம்]

நிறைவேற்றிவிட்டோம். சர்வ கட்சிகளைக் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். சர்வ கட்சிக் குழு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலேயே சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தி இருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியின் சார்பில் பேசும்போது கருத்துகளைச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இலங்கைக்குச் செல்வார்கள் என்று சொன்னார்கள். இதுவரையிலும் செல்லவில்லை. வெளியுறவுத் துறைச் செயலாளர் சென்றாரா, என்ன செய்தார் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. சிவபுண்ணியம். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. *(குறுக்கீடு)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, நான் முடித்துவிடுகிறேன். ஆகவே, மத்திய அரசாங்கம் இதிலே துரிதமாகக் கவனம் செலுத்தவில்லை. இன்றைக்கு ஏன் இந்தக் கருத்து வருகிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்று வருகிறபோது, அது பத்திரிகைச் செய்தியாக வருகிறது. தொலைக்காட்சி செய்தியாக வருகிறது, அதிலே தலைப்பே என்ன வந்தது? 'அய்யகோ ! இலங்கையிலே தமிழினமே அழிகிறதே; இந்தியப் பேரரசுக்கு இறுதி வேண்டுகோள்' என்றுதான் வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுபவ ரீதியாக இருக்கிற காரணத்தினாலே அவர்களுடைய உணர்வுகளை, எண்ணங்களை நான் புரிந்துகொள்கிறேன்; ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும் இப்பொழுதும் வேண்டுகோள் என்று வைக்கிறார்கள். என்னைப் போன்றவர்கள், நான் சொல்கிறேன், எச்சரிக்கை என்ற வார்த்தை அதிலே பயன்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுகிறேன். இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சருடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிற காரணத்தினாலே ஒருமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும், இலங்கையிலே அமைதி நிலவ வேண்டும். போர் நிறுத்தம் காண வேண்டும். அரசியல் தீர்வு காண வேண்டும். அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படக் கூடாது. அதற்குரிய முயற்சிகளை விரைவாக எடுக்க வேண்டும். அதற்கு வலியுறுத்த வேண்டும். இல்லையென்றால், அடுத்த கட்ட தீவிரமான ஒரு முயற்சிக்கு நம்முடைய தமிழ்நாடு அரசும்,

[திரு. வை. சிவபுண்ணியம்] [2009 ஜனவரி 23

தமிழக மக்களும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமைகிறேன். நன்றி. வணக்கம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகின்றபோது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கட்சியினர், இன்னொரு கட்சியினரைக் குறை சொல்லிப் பேச வேண்டாம் என்று நான் முதலிலேயே வேண்டுகோள் வைத்திருக்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் இங்கே பேசுகின்றபோது ** அவர் சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)* அது உண்மையான செய்தி அல்ல. *(குறுக்கீடு)* தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுகிறேன். *(குறுக்கீடுகள்)* அவைக் குறிப்பில் இருந்து தயவுசெய்து நீக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)*

*முற்பகல் 10-05*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடுகள்)* இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக நடைபெறுகிற இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இலங்கையில் தொடர்ந்து நடந்து வருகிற போரினால், இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழ் மக்கள், பெரியவர்கள், பெண்கள், குழந்தைகள் என்று அப்பாவித் தமிழ் மக்கள் கொடூரமாகக்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2009 ஜனவரி 23] [திரு. சி. கோவிந்தசாமி]

கொல்லப்படுகிற நிகழ்ச்சிகள் மனிதாபிமான உணர்வு கொண்ட யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆகவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தக் கொலைபாதகச் செயலை நடத்துகிற இலங்கை அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறது. (குறுக்கீடுகள்) தலைவர் கொஞ்சம் அமைதியை ஏற்படுத்தினீர்கள் என்றால், நான் சொல்வது சபையினருக்குக் கேட்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசுவது ரெக்கார்ட் ஆகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, இலங்கையில் நடைபெறுகிற அந்தப் படுகொலைகளை, தமிழ் மக்கள்மீது நடத்தப்படுகின்ற கொடூரமான கொலைவெறித் தாக்குதல்களை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கை அரசாங்கம் தனது இராணுவத் தாக்குதலைத் தொடர்ச்சியாக இன்றைக்கு நடத்தி வருகிறது. கிளிநொச்சியைப் பிடித்துவிட்டோம்; முல்லைத் தீவைப் பிடித்துவிடுவோம் என்றெல்லாம் இன்றைக்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்து கொக்கரிக்கிற செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஆகவே, ஓர் உச்ச கட்டப் போரை இலங்கையிலே நடத்தி இலங்கைப் பிரச்சினைக்கு இதோடு தீர்வு கண்டுவிடலாம் என்கிற ஒரு நப்பாசையோடு இலங்கை அரசாங்கம் இந்தப் போர் வெறியைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. இலங்கை அரசாங்கத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புவது, 'ஒருவேளை விடுதலைப் புலிகள் போரிலே வீழ்ச்சியடைந்து நீங்கள் வெற்றி பெற்றாலும்கூட, இலங்கையிலே அமைதி திரும்பாது' என்பதைத்தான் நான் இங்கே எச்சரிக்கையாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இலங்கை அரசாங்கம் தன்னுடைய போர் நடவடிக்கையைக் கைவிடவில்லை என்றால், இன்றைக்கு அவர்களோடு நேருக்கு நேர் போரிடுகிற விடுதலைப் புலிகள், காடுகளுக்குள்ளே சென்று கொரில்லாத் தாக்குதல் நடத்துகிற நிலைமை இலங்கையில் உருவாகுமானால், இலங்கையிலே அமைதி திரும்பாது. இலங்கைத் தமிழர்களுக்கும் பாதுகாப்பு இருக்காது.

[திரு. சி. கோவிந்தசாமி] [2009 ஜனவரி 23

இலங்கையில் அமைதி திரும்பாது என்ற ஒரு காரணத்தை, இலங்கை அரசாங்கம் கவனத்திலே கொண்டு உடனடியாக இரு தரப்பாரும் போரை நிறுத்தி, சமாதான ரீதியாக, பேச்சுவார்த்தைமூலமாக ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதுதான் இலங்கைவாழ் தமிழர்களுக்கும் நல்லது, இலங்கையின் எதிர்கால நலனுக்கும் நல்லது; என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இங்கே அழுத்தமாக நாங்கள் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறோம்.

இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, பொதுவாக இந்த இலங்கைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு என்ற நிலை எட்டுகிறபோது, ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய வட கிழக்கு மாநிலங்களை இணைத்து, எப்படி இந்தியாவில் தமிழகம் செயல்படுகிறதோ, அதுபோல, இலங்கையிலே ஒரு தனி மாகாணம், சுயாட்சி அதிகாரங்களைக் கொண்ட ஒரு தனி மாகாணம் உருவாக்கப்பட்டால், இலங்கையிலே வாழ்கிற ஒட்டுமொத்த, அனைத்துத் தமிழ் மக்களின் நலனும் அதன்மூலம் பாதுகாக்கமுடியும். அதுபோன்ற ஓர் அரசியல் தீர்வை உருவாக்குவதற்காக இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்தக் கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆகவே, இருதரப்பாரும் போரை நிறுத்தி சமாதான ரீதியான ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதை இந்த அவையின்மூலமாக மீண்டும் ஒருமுறை நாங்கள் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறோம். அந்தச் சூழலை உருவாக்குவதற்காக நம்முடைய மத்திய அரசாங்கம் உரிய முறையிலே தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, ராஜதந்திர ரீதியிலான ஒரு அணுகுமுறையை மேற்கொண்டு, போரை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசாங்கத்தை, இணங்க வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

அதேபோல இன்றைக்கு இலங்கையிலே பாதிக்கப்பட்டிருக்கிற தமிழ் மக்களுக்கு உதவிகள், நிவாரணங்கள் தேவைப்படுகின்றன. ஏற்கெனவே, மத்திய அரசும், மாநில அரசும் நிவாரணங்கள் வழங்கியிருக்கின்றன. அது வரவேற்கத்தக்கது. அது தொடர வேண்டும். அதனை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. அதேநேரத்தில், அகதிகளாக இந்தியாவுக்கு

2009 ஜனவரி 23] [திரு. சி. கோவிந்தசாமி]

வந்து, தமிழகத்தில் ஆங்காங்கே முகாம்களிலே இருக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும், போதிய வசதிகளையும், அவர்களுக்கு வேண்டிய பல அடிப்படைத் தேவைகளையும் அரசு நிறைவேற்றித் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலங்கைப் பிரச்சினை இப்பத் தொடர்ந்து நீடித்து வருவது உண்மையிலேயே எல்லோரும் வேதனைப்படுகிற ஒரு நிகழ்வு. ஆகவே, அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், அதேநேரத்தில் இலங்கையில் நடைபெறுகிற பிரச்சினையை மையமாக வைத்து, தமிழகத்திலே சில அமைப்புகள் தனி ஈழம் அங்கே கிடைக்கவில்லையென்றால், தமிழகம் தனியாகச் செல்லும் என்கிற வகையில், பிரிவினை கோஷத்தை தமிழகத்திலே ஆங்காங்கே முன்னுக்கு வைப்பது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறானது. அது இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரானது. ஆகவே, அப்படிப்பட்ட கோஷங்களை தமிழகத்திலே அனுமதிக்கக்கூடாது என்பதையும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். டெல்லியிலிருந்து வருபவர்கள் தமிழகத்திற்கு வந்தால், விசா வாங்க வேண்டுமென்றெல்லாம் பேசுவது இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழியாக இருக்காது என்பதையும் நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, அந்த முறையிலே அதுபோன்ற பிரிவினை கோஷங்களைக் கைவிட்டு, இலங்கைவாழ் தமிழ் மக்களின் நலனைப் பாதுகாக்கக்கூடிய வகையில் இலங்கையிலே அமைதி திரும்ப வேண்டும் என்பதற்காக, தமிழகத்திலே இருக்கிற நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று ஒருமுகமாகக் குரல் கொடுப்பதுதான் இலங்கைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை உருவாக்கும். அப்படி மத்திய அரசாங்கம் அதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், இலங்கைப் பிரச்சினையிலே தொடர்ச்சியாகத் தன்னுடைய நிலையை இந்த அவையிலும்சரி, நாட்டு மக்களுக்கு முன்னாலும்சரி வலியுறுத்தி வருகிறது. 1983 ஆம் ஆண்டு, இந்தப் பிரச்சினை மிகப் பெரிய அளவிலே உருவானபோது, அன்றைக்கு இந்தியப் பிரதமராக இருந்த பெருமதிப்பிற்குரிய மறைந்த அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், அன்றைக்கு தமிழகத்தினுடைய முக்கியமான தலைவர்களை

எல்லாம் அழைத்து, இந்திய அரசாங்கம் இலங்கைப் பிரச்சினையில் எப்படிப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்வது என்று ஆலோசனை நடத்தியபோது, அன்றைக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பெருமதிப்பிற்குரிய தலைவர், தேசிய தலைவராக விளங்கிய பெருமதிப்பிற்குரிய தோழர் பி. இராமமூர்த்தி அவர்கள், அன்றைக்கு அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களோடு நடத்திய ஆலோசனையிலே எடுத்துச்சொல்லப்பட்டபோது, இந்தியாவிலே காலிஸ்தான் தனி நாடு என்ற கோஷம் முன்னுக்கு வருகிற காலம், வட கிழக்கு மாநிலங்களிலே தனி நாடு வேண்டுமென்கிற கோஷம் எழுகிற காலம், அப்படிப்பட்ட ஒரு சூழலில் இலங்கையிலே தனி நாடு, இலங்கையிலே தனி ஈழம் என்பதை இந்திய அரசு அங்கீகரிக்க முடியாது என்று அந்த விவாதத்தின் இறுதியிலே ஆலோசிக்கப்பட்டது. ஆகவே, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, 1983-ல் இந்தப் பிரச்சினை முன்னுக்கு வந்தபோது, என்ன கருத்தைக் சொன்னதோ, அதாவது ஒன்றுபட்ட இலங்கைக்குள், அங்கே ஒரு அரசியல் தீர்வு, தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் ஒரு சுய ஆட்சி அதிகாரத்தோடுகூடிய, தமிழகத்தைப்போல, ஒரு மாநில அரசு, இலங்கையில் அமைய வேண்டும். அதுதான் இலங்கை மக்களுக்கும் இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கும் எதிர்கால வாழ்வுக்கு உதவி செய்யும். இலங்கையின் இறையாண்மைக்கும் சரி, இந்தியாவின் இறையாண்மைக்கும், அதுதான் பொருத்தமானதாக அமையும் என்று 1983-லேயே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்திச் சொன்னது. ஆகவே, அதே கருத்தைத்தான் இன்றைக்கும் வலியுறுத்துகிறோம். தனி ஈழம் தீர்வு அல்ல; ஆகவே, தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கக்கூடிய வகையிலே, இந்திய அரசாங்கம் அதற்குரிய முறையில் தன்னுடைய ராஜதந்திர ரீதியான அணுகுமுறையை மேற்கொண்டு இந்தப் போரை நிறுத்தி, சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அரசியல் தீர்வை உருவாக்குவதற்கான நிர்ப்பந்தத்தை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இதற்காக இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும். அந்த ஒன்றுபட்ட நிலையிலிருந்து தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் நாம் அனைவரும் ஒருமித்த குரல் எழுப்ப வேண்டும். தனி ஈழத்திற்காகப் போராடுகிற திரு. பிரபாகரன் அவர்கள்கூட ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திலே, நார்வே நாட்டு பிரதிநிதிகளோடு நடத்தப்பட்ட சமரச பேச்சுவார்த்தையில் தனி ஈழத்தைக் கைவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு அரசியல் தீர்வுக்குச் சம்மதம் தெரிவித்தார்கள் என்ற செய்திகள் எல்லாம்

இருக்கின்றன. அதையும் கவனத்திலே கொண்டு தமிழகத்திலும், இந்தியாவிலும் இருக்கிற அரசியல் கட்சிகள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நல்ல அரசியல் தீர்வை உருவாக்குவதற்கு எல்லோரும் சேர்ந்து குரல் கொடுப்பதுதான் இலங்கைவாழ் தமிழ் மக்களின் நலனைப் பாதுகாக்க வழி செய்யும் என்பதையும், அதற்குப் பொருத்தமான முறையிலே மிகுந்த அனுபவம் மிக்க நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கேற்ற வகையிலே ஒரு தீர்மானத்தை முன்மொழிவார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

*முற்பகல் 10-15*

தீர்மானம் முன்கூட்டியே தெரிந்தால் அதுபற்றியும் கருத்துகளைச் சொல்ல வாய்ப்பு இருந்திருக்கும். ஆனாலும், தீர்மானம் வந்த பிறகு, அதிலே கருத்துச் சொல்ல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டு, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தக் கருத்தை இந்த அவையிலே பதிய வைத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், நீங்கள் காலதாமதமாக அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். இருந்தாலும், பேசுங்கள்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இலங்கைப் பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு இறுதி வேண்டுகோள் என்ற வகையில், இன்றைக்கு ஒரு தீர்மானத்தை முன்மொழியவிருக்கின்றார்கள். தீர்மானத்தினுடைய கருத்துகள், அதனுடைய ஆழம் தெரியாமலேயே நான் கருத்துகளைச் சொல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றேன்.

ஏற்கெனவே இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்த அவையிலே பலமுறை கவன ஈரப்புத் தீர்மானத்தின் மூலமாக எல்லாக் கட்சிகளும் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றன. இலங்கையிலே தொடர்ந்து தமிழ் இனம் உரிமைக்காகப் போராடி வருகின்றது. ஆனால், சிங்கள அரசு திட்டமிட்டு இனப் படுகொலை செய்து வருகின்றது. இந்த இனப் படுகொலையைத் தடுக்க வேண்டுமெனவும், அதே நேரத்தில் சிங்கள அரசு போரை நிறுத்த வேண்டுமென வலியுறுத்தியும், இந்த அவையிலே உள்ள அனைத்துக் கட்சிகள், அவற்றினுடைய கருத்துகளில், கொள்கைகளில் பல வேறுபாடுகள் இருந்தாலும்கூட, அக்கட்சிகளின் ஏகோபித்த உணர்வில்,

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2009 ஜனவரி 23

ஒருமித்த கருத்தில், அவசியம் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்தி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மூலமாக மத்திய அரசுக்கு இரண்டு தீர்மானங்கள் அனுப்பி வைக்கப்பட்டு, இரண்டு மாதங்கள் உருண்டோடிவிட்டன. மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அந்தத் தீர்மானத்தின்மீது மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுத்திருக்கின்றதா என்று எண்ணிப் பார்க்க வேண்டிய நிலையிலேதான் இன்றைக்கு மூன்றாவது தீர்மானத்திற்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். தீர்மானம், அதனுடைய நோக்கம், போர் நிறுத்தம்தான்.

மாண்புமிகு முதலமைச்சர் பிரதமரை நேரடியாகச் சந்தித்து, போர் நிறுத்தம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனச் சொன்னார்கள். வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி வைத்து உரிய நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால், மாறாக, இரண்டு முறை தீர்மானம் போடப்பட்டும், நம்முடைய முதலமைச்சர் அவர்களே நேரடியாகப் பிரதமரைச் சந்தித்து வலியுறுத்திய பின்பும் திரு. பிரணாப் முகர்ஜியை அனுப்பவில்லை. மாறாக, வெளியுறவுத் துறைச் செயலாளர் திரு. சிவசங்கர் மேனனை அனுப்பி வைத்திருக்கின்றார்கள். அவர் இரண்டு நாட்கள் இலங்கையிலே இருந்து, இலங்கையின் வெளியுறவுத் துறைச் செயலாளர், வெளியுறவுத் துறை அமைச்சர், பாதுகாப்புத் துறைச் செயலாளர், அதிபர் ராஜபக்சே, அவருடைய ஆலோசகர் பசில் ராஜபக்சே போன்றவர்களையெல்லாம் பார்த்து பல விஷயங்கள்பற்றி பரிமாற்றம் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், பத்திரிகையிலே என்ன செய்தி வந்திருக்கின்றது? தீர்மானத்தினுடைய நோக்கத்தைக் குறித்து, அதாவது போர் நிறுத்தத்தைக் குறித்து, மத்திய அரசின் கருத்தை, மத்திய அரசில் நாம் சொன்ன அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் திரு. சிவசங்கர் மேனன் போர் நிறுத்தம் குறித்துப் பேசியதாக பத்திரிகைகளிலே செய்திகள் வரவில்லை; இது ஒன்று. இரண்டாவது, மாறாக, இலங்கைக்கும், இந்தியாவுக்கும் வர்த்தகம் மற்றும் பொருளாதார முன்னேற்றம் குறித்துப் பேசினோம்; அது செழுமையாக இருக்கின்றது என்ற வகையிலேதான் அவர்கள் பேசியிருக்கின்றார்கள்.

நான் கேட்பதெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே டெல்லிக்குச் சென்று தன்னுடைய கருத்தை வலியுறுத்தி, இரண்டு முறை தீர்மானத்தை அனுப்பி வைத்தும்கூட, இன்றைக்கு மத்திய அரசால் அனுப்பப்பட்ட வெளியுறவுத் துறைச் செயலாளர்,

2009 ஜனவரி 23] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

போர் நிறுத்தம் குறித்துப் பேசாதது மட்டுமல்லாமல், அங்கே போர் நிறுத்தம் செய்வார்களா, செய்யமாட்டார்களா, முல்லைத் தீவிலே வாழ்கின்ற தமிழ் மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து கிடைத்ததா என்ற விவரங்களையாவது, தகவலையாவது அங்கே நடந்த விஷயங்களையாவது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தார்களா என்று சொன்னால், தெரிவிக்கவில்லை. அப்படித் தெரிவிக்கவில்லை என்கிற நிலையில்தான் இன்றைக்கு இங்கே மூன்றாவது முறையாகவும் இறுதி வேண்டுகோள் என்ற வகையிலேயும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தினைப் பரிந்துரை செய்கின்றார்கள்.

முற்பகல் 10-20

இறுதியாக நான் வருவது, ஏற்கெனவே எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அண்ணன் திரு. கண்ணப்பன் அவர்கள் இங்கே உரையாற்றுகின்றபோது, ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்ட தீர்மானத்தில் சில திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று கோரினார்கள். இலங்கை விமானப் படைக்கு வழங்கியுள்ள ரேடார் கருவிகளை இந்தியா திரும்பப் பெறவேண்டும். இலங்கைக்கு அனுப்பியுள்ள தொழில்நுட்ப வல்லுநர்களையும், இராணுவத்தினர்களையும் திரும்ப அழைக்க வேண்டும். இந்தியா, இலங்கைக்குக் குறைந்த வட்டியில் தருவதாகச் சொன்ன கடனையும் ரத்து செய்ய வேண்டும். இந்தியா-இலங்கை கடற்படை செய்துகொண்ட தகவல் பரிமாற்ற ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும். இலங்கை இராணுவத்திற்கும், விமானப் படைக்கும் இந்தியாவிலே அளிக்கப்படும் பயிற்சிகளை உடனடியாக நிறுத்த வேண்டும். தமிழர்கள் மீதான தாக்குதல்களை இலங்கை அரசு உடனடியாக நிறுத்திவிட்டு, இலங்கையில் போர் நிறுத்தம் அறிவிக்க வேண்டும். முறிந்துபோன பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும். ஈழத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற வகையிலே உடனடியாக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் இலங்கை அரசு செய்ய மறுத்துவிட்டால், செய்ய முன்வராவிட்டால், தூதரக உறவை உடனடியாக முறித்துக்கொள்வதாகவும், பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தப்போவதாகவும், இந்தியா இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுக்கவேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தோடு, இரண்டு முறை இந்த அவையின் மூலமாக ஏகோபித்த குரலில் அனுப்பி வைத்த

தீர்மானத்திற்கு மத்திய அரசு செவிசாய்க்காததனால் அதற்குக் கண்டனம் தெரிவித்தும், அந்தத் தீர்மானத்தோடு இவற்றையும் சேர்த்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழியவேண்டும் என்ற கருத்தைச் சொல்லி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காலம் கருதி இடத்தாற் செயின்' என்பதற்கு ஒப்ப, இலங்கையில் தமிழினம் ஒட்டுமொத்தமாக அழிவின் விளிம்பில் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நடுவண் அரசுக்குக் கோரிக்கை வைக்கிற வகையிலும், தமிழ் இனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காகவும் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தினை எடுத்து விவாதித்து ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்தின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முதலில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் பல்வேறு கோணங்களில் நிலைப்பாடுகள் இருந்தாலும்கூட, செயல் நடவடிக்கைகளில் வேறுபாடுகள் இருந்தாலும்கூட, தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளும், அனைத்து அமைப்பினரும் குறிப்பாக, மாணவர்கள் தொட்டு, எல்லாத் தரப்பினரும் தமிழ்நாட்டில் உள்ள அனைவரும் ஒட்டுமொத்தமாக விரும்புவதும், உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் எல்லாம் விரும்புவதும், உலகில் பல்வேறு நாடுகளில் அமைதி வேண்டும் என்று விரும்பக்கூடியவர்கள் எல்லோருக்கும் இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் தேவை என்பதைத்தான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அடிப்படையில் நம்முடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசப்படுகிற வார்த்தைகளாக இருந்தாலும் அல்லது சுட்டிக்காட்டப்படுகிற நடவடிக்கைகளாக இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரக்கூடிய ஒரு நல்ல தீர்மானத்திற்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும், அதற்கொப்ப நம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு உங்களுடைய ஆதரவினை நல்கிட வேண்டும் என்கிற வேண்டுகோளை நான் மீண்டும் முன்வைக்க விரும்புகிறேன். ஆகவே, பேசுகின்ற நேரத்தில் நடந்தவற்றைச் சுட்டிக்காட்டினாலும்கூட, யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காக அல்ல; அந்த செயலினால் நம்முடைய

2009 ஜனவரி 23] [திரு. ஜி.கே. மணி]

நிலைப்பாடுகள் திசை திரும்பி, திசைமாறி போய்விடக்கூடாது என்பதையும் இங்கே கவனத்தில் கொண்டு, ஒட்டுமொத்தமாக இங்கே உள்ள பிரதானக் கட்சிகள் உட்பட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகமும் தமது நிலைப்பாட்டைச் சொல்லியிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இன்று வந்திருக்கிற செய்தியிலே "அய்யகோ! தமிழினம் அழிகிறதே; இந்தியப் பேரரசுக்கு இறுதி வேண்டுகோள்" என்ற அவர்களுடைய எண்ணத்தை, உள்ளக்கிடக்கையை வெளிக்கொணர்ந்து இருக்கிறார்கள். அதேபோல் பாட்டாளி மக்கள் கட்சியும் பல்வேறு நிலைகளிலே வெளிப்படுத்தி வந்திருக்கிறது.

முற்பகல் 10-25

பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற அ.தி.மு.க.-வும் தமிழினம் காக்கப்பட வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை என்ற செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. இந்தியப் பேரரசை ஆட்சி செய்து கொண்டிருக்கிற, தலைமையேற்றுக் கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சி, அங்கே தமிழினம் காக்கப்பட வேண்டும் என்று சொன்னால், போர் நடவடிக்கை தீர்வாகாது; போர் நிறுத்தம் வேண்டும் என்ற அடிப்படையிலே, காங்கிரஸ் கட்சியும், குறிப்பாக, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும் ஒட்டுமொத்தமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிற சூழல். இரண்டு பெரிய பொதுவுடைமைக் கட்சிகள், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் போன்ற எல்லாக் கட்சிகளுடைய நோக்கமும் போர் நிறுத்தம் தேவை; தமிழினம் காக்கப்பட வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையிலேதான் பல்வேறு கோணங்களிலே நாம் பேசினாலும்கூட, ஒட்டுமொத்த தீர்மான வடிவத்திற்கு முழு ஆதரவு வேண்டும். 'கடந்த காலத்தில் கொடுத்ததைப்போல நிறைவேறக்கூடிய தீர்மானம், இது இறுதித் தீர்மானம், இலங்கையில் நல்ல தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை மீண்டும் மீண்டும் நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அனைவரின் பாதம் தொட்டு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையிலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, இலங்கைப் பிரச்சினை என்பது, இன்று நேற்று தொடங்கிய பிரச்சினை அல்ல. இதிலுள்ள வரலாற்று உண்மைகளை அந்த நாட்டின், இன வெறிப் பிடித்த சிங்கள அரசும் உணர்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காக, நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது,

[திரு. ஜி.கே. மணி] [2009 ஜனவரி 23

இலங்கை, சுதந்திரம் பெற்ற பிறகு, படிப்பதற்கும், வேலைக்குச் செல்வதற்கும், சிங்களர்களோடு சம உரிமை வேண்டும் என்பதைக் கேட்ட தமிழர்களின் உரிமை மறுக்கப்பட்டு, தொடர்ந்து போராட்ட நிலை; இலங்கையிலே அரசியல் சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்த நிலை; அதனால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட நிலை; இவற்றை எல்லாம் முன்வைத்துத்தான் அமைதிவழிப் போராட்டங்கள், அறவழிப் போராட்டங்கள், அந்தப் போராட்டங்களை எல்லாம் நடத்தி, உரிமைகளை மறுத்த காரணத்தினாலேதான் ஈழத் தந்தை செல்வா அவர்கள் முதன்முதலாகப் பிரகடனம் செய்கிறார்கள். இது இன்று தொடங்கிய போராட்டம் அல்ல. உலகத் தலைவர்கள் மதிக்கிற தலைவர் ஈழத் தந்தை செல்வா. அவர்கள் தொடங்கிய போராட்டம் உச்ச கட்டத்தை எட்டி, இன்று ஒட்டுமொத்தமாகப் போராட வேண்டிய நிலை. தமிழர்களுக்கு உரிமை இல்லை; தமிழினத்தை அடியோடு அழித்துவிட வேண்டும் என்ற முயற்சியிலே இன வெறிப் பிடித்த ராஜபக்சே செய்து கொண்டிருக்கிறார். இது ராஜபக்சேயினுடைய நோக்கம். பல்வேறு அறிஞர்கள் சொல்வது என்ன தெரியுமா? 50 ஆண்டுக் காலம் தமிழர்களை அழிக்க முடியாத நிலை; தொடர்ந்து நடக்கிற போராட்டத்தை அழிக்க வேண்டும் என்று சொன்னால், தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொன்னால், தமிழினத்தை அழித்து விடவேண்டும்; அப்படித் தமிழினத்தை அழித்துவிட்டால், சிங்களர்கள் முழுமையான ஆதரவு பெற்று ராஜபக்சே, நிலையான ஆட்சியை நடத்த முடியும் என்ற அந்த நோக்கத்தை வைத்து ஈழத்தை அழித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, இதை உலக நாடுகள் எண்ணிப் பார்க்கின்றன; நாமும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு முறை அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள், அக்டோபர் 14-இல்; நவம்பர் 25-இல். அந்தக் கூட்டங்களிலே ஒருமனதாக ஏற்றுக்கொண்ட நடவடிக்கைகளை நாம் பார்த்தோம். அதற்குப் பிறகு ஏப்ரல் 24-இல், நவம்பர் 4-இல், இரண்டு முறை சட்டமன்றத்திலே ஒரு மனதான தீர்மானங்கள்; பிரதான எதிர்க்கட்சி உட்பட எல்லாக் கட்சிகளும் ஆதரித்த நிலை. நாம் மகிழ்ச்சியோடு ஏற்று, தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பி வைத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், கொட்டும் மழையில் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக ஒட்டுமொத்த மக்களின் வரலாறு காணாத

2009 ஜனவரி 23] [திரு. ஜி.கே. மணி]

மனிதச் சங்கிலிப் போராட்டம். இது வரலாறு படைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே அனைத்துக் கட்சித் தலைவர்கள் எல்லாம் டிசம்பர் 4 ஆம் தேதி டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்த நிலை. இப்படிப் பல்வேறு நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அக்டோபர் 6 ஆம் தேதி மயிலை மாங்கொல்லையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய உரை எல்லோரையும் ஈர்த்தது. நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு நீங்கள் தவறாக நினைத்துக்கொள்ளக்கூடாது. அன்பிற்குரிய திரு. திருமாவளவன் அவர்கள்கூட சாகும்வரை உண்ணாவிரதம் என்றார். அது அவருடைய விருப்பம். ஆகவே, இப்படிப் பல்வேறு காலக்கட்டங்களில் எல்லா அரசியல் கட்சிகளும் தனித்தனியான போராட்டங்கள், கூட்டு நடவடிக்கைகள், ஒரு சில அணிகள் சேர்ந்து என்று எல்லோரும் செய்து வந்த நிலை. இப்படி இருக்கின்ற சூழ்நிலையில் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, நான் அரசியல் நோக்கத்திற்காக அல்ல; நடக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகச் சொல்கிறேன். 1972-ல் கிழக்கு பாகிஸ்தானுக்கு இராணுவத்தை அனுப்பி, பாகிஸ்தான் இராணுவத்தோடு சண்டையிட்டு, பாகிஸ்தானை உடைத்து, வங்க தேசம் என்ற புதிய நாட்டை உருவாக்கியதைபோல இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பிச் சண்டையிடுங்கள், பிரித்துக் கொடுங்கள் என்று நாம் சண்டை போடச் சொல்லவில்லை. அந்த அளவிற்கு நான் போக விரும்பவில்லை. அதே நேரத்தில் தலையிடுவதற்கான ஆதாரங்கள், உலக அளவில் பல்வேறு முன்னுதாரணங்கள் இருக்கின்றன. நியாயம் இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

முற்பகல் 10-30

உலகில் எந்த ஒரு பகுதியிலும் ஒரு இனம், ஒரு மொழி பேசும் மக்கள், ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் அல்லது ஒரு பகுதியில் குடியிருப்பவர்கள் என்று வைத்துக்கொண்டால், அவர்களிடையில், தங்கள் உரிமைக்காகப் போராட்டங்கள் வருகின்றன என்று சொன்னால், அதனை மற்ற நாடுகள் ஆதரிப்பதில், அங்கீகரிப்பதில்

தவறு இல்லை என்று 1948 ஆம் ஆண்டிலேயே ஐ.நா. அவை நிறைவேற்றியிருக்கிற அரசியல் சாசனத்திலும் தெரிவித்திருக்கிறது. இப்படித் தலையிடுவது இன்னொரு நாட்டின் இறையாண்மையில் தலையிடுவதாகும்; இன்னொரு நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதாகும் என்று சொல்வதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற குற்றச்சாட்டுக்கும் ஐ.நா. அவை சரியாக விடையளித்திருக்கிறது. இறையாண்மை என்ற பெயரில் ஒரு நாட்டின் இராணுவமோ அல்லது பாதுகாப்புப் படையினரோ அந்த நாட்டிலுள்ள குறிப்பிட்ட ஒரு இன மக்களை அழித்தொழிப்பது இறையாண்மையாகாது. இறையாண்மை என்ற கேடயத்தை சிங்கள அரசு இன அழிப்புக்குப் பயன்படுத்தக் கூடாது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். இராணுவத்தைப் பயன்படுத்தி இன அழிப்பைச் செய்து கொண்டிருக்கிற ஒரு நாட்டின் விவகாரத்தில் மற்ற நாடுகள் தலையிடலாம் என்றும், இன்னும் சொல்லப்போனால், போர்ப் படையினரை அனுப்பிக்கூட தலையிடலாம் என்றும் உலக நாடுகளின் அவை, ஐ.நா. அவை வழிகாட்டுதலை வகுத்துக் கொடுத்திருக்கிறது.

இந்த அடிப்படையில், அண்மைக் காலத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பல இன மக்கள் சுய நிர்ணய உரிமைக்காகவும், சுயாட்சிக்காகவும் ஆயுதம் ஏந்திப் போராடியதும் உண்டு. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ நாடுகளின் கூட்டமைப்பு தலையிட்டு, இன எழுச்சிக்கு எதிரான அடக்குமுறையை ஒடுக்கியிருப்பதும் நாம் நன்கு அறிந்த ஒன்று. பல்வேறு இன, மத, மொழி சார்ந்த மக்களுக்குத் தனி நாடுகளைப் பிரித்துக் கொடுத்திருப்பது வரலாறு. உதாரணத்திற்கு போஸ்னியா, ஹெர்சகோவினா, செர்பியா போன்ற நாடுகளில் கடந்த காலங்களில் நடந்த வரலாற்று உண்மைகள். நமக்கு அருகில் உள்ள இந்தோனேஷியாவிலேயிருந்து கிழக்கு தைமூர் தனி நாடாக உதயமானதும் இந்த அடிப்படையில்தான் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, இலங்கையில் நடைபெறுவது உள் நாட்டுப் பிரச்சினை என்றோ, அந்த நாட்டின் இறையாண்மை என்றோ, தலையிடுவது தவறு என்றோ யாரும் சொல்லிவிட முடியாது. இலங்கைப் போர்ப் படையினர் நடத்திக் கொண்டிருப்பது இனப் படுகொலைதான் என்று அறிவித்து, உலகில் இனப் படுகொலை நடைபெறும் எட்டு நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் ஐ.நா. அவை சேர்த்திருக்கிறது. இப்படியெல்லாம் நிலைமை இருக்கிறது. இதில் தலையிடுவதற்குக் காரணம் இருந்தாலும்,

2009 ஜனவரி 23] [திரு. ஜி.கே. மணி]

தலையிட்டு நடவடிக்கை எடுப்பதற்கு எல்லா வகையிலும் இந்தியாவிற்கு உரிமை இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அடிப்படையிலேதான் கடந்த காலங்களில் இதில் அன்னை இந்திரா காந்தி அவர்களும், அமரர் ராஜீவ் காந்தி அவர்களும் எவ்வளவு வேகமாகத் தலையிட்டார்கள் என்பதையெல்லாம் இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக, உலகெங்கும் வாழும் எட்டுக் கோடி தமிழர்களும், இந்தியாவின் ஓர் அங்கமாகத் திகழும் தமிழகத்தில் வாழும் அனைத்துத் தமிழர்களும், அனைத்துக் கட்சியினரும், அனைத்துப் பிரிவினரும் 'தலையிடுங்கள், சண்டையை நிறுத்துங்கள், தமிழினத்தை அழிவிலிருந்து காப்பாற்றுங்கள்' என்று குரல்கொடுத்து வரும்போது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, உரையை முடித்து விடுகிறேன். வரும்போது, உடனடியாகப் போர் நிறுத்தம் தேவை என்பதை எல்லாத் தரப்பும் எண்ணிப் பார்க்கின்றன. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ள விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இதுகுறித்து உலக நாடுகளில் இருந்து, தமிழகத்திற்குக் கோரிக்கைகள் வந்து கொண்டே இருக்கின்றன. அதிலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது பிரான்ஸ் நாட்டிலேயிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தமிழக மக்களுக்கும் செய்தி வந்துள்ளது. அதிலே 'செயலே தமிழினத்தைக் காக்கும், பேச்சல்ல' என்றும், பேசிக் கொண்டிருப்பதைவிட செயல்தான் தமிழினத்தைக் காக்கும் என்ற அடிப்படையிலும் இலங்கைத் தமிழ் மண்ணில் இன்றுள்ள உண்மையான நிலவரம், இன வெறித் தாக்குதலில் தமிழர்கள் படும் அவதி, அவர்களும் உலகெங்கும் பரவிக் கிடக்கும் தமிழர்களும் எதிர்பார்த்து நிற்கின்ற ஏக்கம், தாயகத்துத் தமிழர்கள் எதையும் செய்ய முடியாமல், கை பிசைந்து நிற்கும் தயக்கம் ஆகியவை குறித்து பிரான்ஸ் நாட்டில் வாழும் தமிழர்கள் மனம் திறந்து எழுதியிருக்கும் மடல். அதிலே நிறைய சொல்லியிருக்கிறார்கள். 'தமிழின அழிப்புக்கு மௌன சாட்சியாக தமிழகம் இருந்துகொண்டிருப்பது பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் எமக்கெல்லாம் கவலையளிக்கிறது.' அதனுடைய பொருள் என்ன? ஆட்சியை வைத்து ஏதும் செய்ய

[திரு. ஜி.கே. மணி] [2009 ஜனவரி 23

முடியாதபோது, ஆட்சியைப் பிணை வைத்து ஒரு வரலாற்றைப் படைக்க ஏன் முயலக் கூடாது என்றும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இறுதியாக அவர்கள் சொல்லியிருப்பது, ஒரு குடும்பத்தின் நலனுக்காக ஒருவரை இழக்கலாம்; ஓர் ஊரின் நலனுக்காக ஒரு குடும்பத்தை இழக்கலாம், ஒரு நாட்டின் நன்மைக்காக ஓர் ஊரையே இழக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பொதுக் கருத்தாக முன்வைக்கப்படுகின்றது. தமிழினத்தின் வாழ்வுக்காக, தன் இனத்தின் மரியாதைக்காக, இன மானத்திற்காக ஓர் ஆட்சியைக் கேடயமாக ஏன் முன் நிறுத்தக் கூடாது என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். [மேசையைத் தட்டும் ஒலி]

*முற்பகல் 10-35*

அதைப்போல, இன்று எழுந்திருக்கிற அவலக் குரல், மக்கள் நாளேடான 'தினத்தந்தி'யிலே வந்திருக்கிற செய்தி, மருத்துவமனைகளெல்லாம் அழிக்கப்பட்ட செய்தி, பிஞ்சுக் குழந்தைகளை அழித்திருக்கிற செய்தி, பார்வையற்றவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், காது கேளாதவர்கள், பெண்கள், முதியோர் என்று பாராமல் குண்டு வீசி அழித்திருக்கிற செய்திகள் இங்கே வந்திருக்கின்றன. இந்தச் செய்திகளைப் படிக்கின்றபோதே நம்முடைய மனம் பதைக்கின்றது. நம்முடைய வேதனையை வெளிப்படுத்துவதற்கு வார்த்தைகள் இல்லை. அந்த அளவிற்கு 'தினத்தந்தி'யிலே செய்தி வந்திருக்கிறது.

இன்னொன்று; 'தினமணி' நாளேட்டிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. 'வரலாறு கவனிக்கிறது. இதைத் தமிழினம், தாயகத்துத் தமிழ் மக்கள் பொறுத்திருந்தால் தமிழின வரலாறு தமிழர்களை மன்னிக்காது' என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். வரலாற்றில் சபிக்கப்பட்ட இரு நிலங்கள், நவீன உலகைப் பின்னோக்கி இழுக்கும் இரு போர் வெறியர்கள், துப்பாக்கிகள், எறிகணைகள், வெடிகுண்டுகள், பீரங்கிகள், ஏவுகணைகள், இரத்தம், ஓலம், மரண ஓட்டம், சாவு, எண்ணிப் பார்க்கிறோம். நிறைய செய்திகள் வந்திருக்கின்றன. உலகின் ஒரு பக்கத்தில் ஓர் இனமே அழிந்துகொண்டிருப்பதை ஒட்டுமொத்த உலகமும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. 2008 ஜனவரி 17-ல் விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்தத்தை முடித்துக்கொண்டார் ராஜபக்சே. அதற்குப் பின்னால், ஐ.நா. சபை, அமெரிக்காவின் புதிய அதிபர்,

2009 ஜனவரி 23] [திரு. ஜி.கே. மணி]

ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா என ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்திற்கும் ஈழத் தமிழர்கள் தனித்தனியே விடுத்த போர் நிறுத்தக் கோரிக்கையை ஒருவரும் பொருட்படுத்தவில்லை. இடம் பெயரும் பிரதேசங்கள்மீதான தாக்குதலையேனும் தற்காலிகமாக நிறுத்த வேண்டுமென்ற தமிழ்மக்களின் குறைந்தபட்ச உயிர்ப் பிச்சையைக்கூட ராஜபக்சே நிராகரித்து விட்டார். எண்ணிப் பார்க்கவேண்டும். குறைந்தபட்ச உயிர்ப் பிச்சையைக்கூட ராஜபக்சே நிராகரித்துவிட்டார் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இறந்தவர்கள் பலருக்கு இறுதிச் சடங்கைக்கூட நடத்தமுடியவில்லை. அங்கே மருத்துவமனைகள்மீதான தாக்குதல்களைக் கைவிட வேண்டும் என்று மருத்துவர்கள் வேண்டுகோள் வைக்கிறார்கள். இப்படி நிறைய சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆறு கோடி தமிழர்களின் உணர்வுகளைப் புறந்தள்ளி, தன்னுடைய இரகசிய உதவிகள்மூலம் ஒரு வரலாற்றுக் குற்றத்தை திட்டமிட்டு நிகழ்த்திக்கொண்டிருக்கிற நடவடிக்கையில் தன்னுடைய வெற்று வார்த்தைகளால் அந்தக் குற்றத்திற்கு உடந்தையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற யாரும் துணை போய்விடக் கூடாது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே அவலம் அரங்கேறிக்கொண்டிருக்கிறது. தமிழினம் அழிவின் உச்ச கட்டத்தில் இருக்கிறது. இது விடுதலைப் புலிகளின் போராட்டம் மட்டுமல்ல. இது 52 இலட்சம் தமிழ் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கையிலே உயிருக்குப் பயந்து தன்னுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களையே அங்கே விட்டுவிட்டு, தமிழ்நாட்டிற்கு, தாயகத்திற்கு அகதிகளாக வந்தார்களே, நம்முடைய தொப்புள்கொடி உறவினர்கள், அவர்கள் தாயகம் திரும்பினார்களா? தாய் மண்ணை நினைத்துப் பார்த்தார்களா? தாய் மண்ணைக் கண்ணில் தொட்டு ஒத்திக்கொள்ளவாவது முடிந்ததா? இன்னும் தாயகம் திரும்பாமல், வழி இல்லாமல், தமிழ்நாட்டிலே இங்கே வேதனையோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்களே, அவர்களை எண்ணிப் பார்க்க வேண்டாமா? உலகெங்கும் அகதிகளாக உள்ள 10 இலட்சம் தமிழர்களை எண்ணிப் பார்க்க வேண்டாமா? பிஞ்சுக் குழந்தைகள் செத்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்களும் தமிழினம்தான்.

இதையெல்லாம் சொல்லிவிட்டு, உலக நாட்டுத் தமிழர்கள் சொல்வது, என்ன தெரியுமா? மும்பையிலே ஒரு பீகார் இனத்தைச் சார்ந்தவன் கொல்லப்பட்டான். எதிரும் புதிருமாக இருந்த அரசியல் கட்சித் தலைவர்கள், பீகார் மாநிலத்தைச் சார்ந்த முன்னாள்

முதலமைச்சர் லல்லு அவர்கள், எப்போதும் சந்திக்காத இன்னாள் முதலமைச்சரை சந்தித்து அந்த மாநிலத்துத் தலைவர்கள் எல்லோரும் பீகார் இனத்தவரின் உயிரிழப்பிற்காக ஒன்றாகச் சேர்ந்து பேசி நடவடிக்கை எடுத்த வரலாறு சமீபத்திலே நடந்தது, (மணியடிக்கப்பெற்றது) ஓர் இனத்தினுடைய ஓர் உயிருக்காக.

*முற்பகல் 10-40*

இலங்கையிலே எத்தனை பேர் செத்துக்கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் எதிர்பார்த்திருப்பது தாயகத்துத் தமிழகத்தின் ஆதரவை. இங்கே வாழுகின்ற நாம் அரசியல் பேசுவதற்கு இதுவா நேரம்? அரசியலைப் புறந்தள்ளிவிடுவோம்; ஒன்றிணைவோம்; ஒன்றாகச் சேர்ந்து குரல் கொடுப்போம். அது தமிழினத்தைக் காப்பதற்காக என்பதை இந்த நேரத்திலே மீண்டும் சொல்லி அங்கே ஒட்டுமொத்தமாகத் தமிழினம் அழிந்து கொண்டிருப்பதால், இந்த இறுதிக் கட்டத்திலாவது நாம் அவர்களைக் காக்கவில்லை என்று சொன்னால், உலகத் தமிழர்கள், வரலாறு படைத்த தமிழினத்தை, தாயகத்துத் தமிழர்களை மன்னிக்கமாட்டார்கள்; தமிழினம் மன்னிக்காது; மன்னிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இறுதித் தீர்வை எட்டவேண்டும்; இதுவே தருணம். முறையான நடவடிக்கை தேவை; போர்நிறுத்தம் தேவை; அமைதிப் பேச்சுவார்த்தை தேவை. அதற்குத் தமிழக அரசு, இந்தப் பேரவை, நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையின் இறுதிக் கட்டமாக நம்முடைய இனத்தை அழித்துக் கொண்டிருக்கிற ராஜபக்சே அவர்களை--

*தமிழினத்தை அடியோடு அழிக்கிற ராஜபக்சேவைக்*
*கண்டிக்கிறோம்; கண்டிக்கிறோம்;*
*எச்சரிக்கிறோம், எச்சரிக்கிறோம்.*
*கண்டிக்கிறோம்; கண்டிக்கிறோம்;*

*(பா.ம.க. உறுப்பினர்கள் கோஷமிட்டனர்.)*

2009 ஜனவரி 23] [திரு. ஜி.கே. மணி]

தமிழினத்தை அழித்துக் கொண்டிருக்கிற
ராஜபக்சேயின் அராஜகத்தைக்
கண்டிக்கிறோம்; கண்டிக்கிறோம்.
சிங்கள அரசின் மனித மிருகச் செயலை
உடனே நிறுத்து; உடனே நிறுத்து.
தமிழினத்தை அழிப்பதை .. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். (குறுக்கீடுகள்)

**•திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே நடைபெற்றிருக்கக்கூடிய பல துயரமான சம்பவங்கள்; அங்கே தொடர்ந்து அப்பாவித் தமிழர்கள்மீது இழைக்கப்பட்டிருக்கின்ற மிகப் பெரிய வன்முறைத் தாக்குதல்; ஒருபுறம் இலங்கை இராணுவம்; மறுபுறம் இராணுவத்திடமிருந்து பாதுகாப்பதற்காக அவர்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துகின்ற விடுதலைப் புலிகள்; இந்த இரண்டு பேர்களுக்கும் நடுவில் அப்பாவித் தமிழர்கள் படுகின்ற பாட்டை, அந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரிய கொடுமையை, அந்த நாட்டின் இளம் தலைமுறைக்கு, சிறார்களுக்கு, இளம் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மிகப் பெரிய வன்முறையை நாம் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய காலம் நமக்கு வாய்த்திருக்கிறதே என்று தமிழர்கள் என்கிற முறையிலே நாம் எல்லோரும் வருந்துகிறோம்; வேதனைப்படுகிறோம்.

இந்த வேதனையிலிருந்து, இந்த வன்முறையிலிருந்து, இந்தப் பயங்கரவாதத்தினுடைய சூழ்நிலையிலிருந்து அந்த மக்களுக்கு ஒரு விடியல் வராதா என்கிற ஏக்கம், தமிழனாய்ப் பிறந்த நம் எல்லோருக்கும் இருக்கிறது. அந்த ஏக்கத்தைத் தீர்த்து, அவர்கள் கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்று தமிழனாகிய நாம் ஒவ்வொருவரும் துடிக்கவேண்டும்; முன்வர வேண்டும் என்பதிலே எங்களுக்கு ஒரு நாளும் மாற்றுக் கருத்து இருந்ததில்லை. அந்தக் கருத்தை நடைமுறைப்படுத்துகின்ற நீண்ட நெடிய பயணம், ஏறக்குறைய 52 ஆண்டுக் காலப் பயணம்.

இங்கே பேசிய அநேக நண்பர்கள், பல அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், ஏதோ நேற்றையதினம் தொடங்கிய இந்தப் பிரச்சினை, நாளை மறுநாள் முடிந்துவிட வேண்டும் என்பதைப்போல, நாம் நினைத்தால், முதலமைச்சர் நினைத்தால், ஆளுங்கட்சி நினைத்தால், மத்திய அரசு நினைத்தால், நாளை காலையிலேயே இலங்கையிலே

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜனவரி 23

அமைதி நிலவி விடும்; அதை யாரோ தடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப்போலப் பேசினார்கள். (குறுக்கீடுகள்) முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** என் அருமைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மத்திய அரசு என்று சொல்கின்றபோது, சிலருக்குக் காங்கிரஸ் அரசு என்கிற எண்ணம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் அவர்களுக்கு மிகப் பணிவாகச் சொல்வேன். மத்திய அரசிலே நாங்கள் மட்டும் இல்லை; நீங்களும் இருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நீங்கள் சொல்ல நினைப்பதை, மத்திய அரசுக்கோ, பிரதமருக்கோ மத்திய அமைச்சரவையிலே சொல்லலாம். உங்கள் கட்சியின் சார்பில் ஒரு கேபினெட் அமைச்சர் இருக்கிறார்; ஒரு துணை அமைச்சர் இருக்கிறார். மத்திய அமைச்சரவையினுடைய ஒவ்வொரு கூட்டத்திலும் நீங்கள் பங்கு கொள்கிறீர்கள். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலே உங்களுடைய தலைவர் இருக்கிறார். ஆகவே, நீங்கள் மத்திய அரசை எதிர்த்துப் பேசுகின்றபோதோ, மத்திய அரசைக் குற்றஞ்சாட்டுகின்றபோதோ, தயவுசெய்து காங்கிரசைக் குற்றம் சொல்கிறோம் என்று மக்கள் நினைப்பார்கள் என்ற எண்ணத்தில் சொன்னால், நீங்கள் ஏமாந்து போவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முழுப் பொறுப்பையும் நீங்களும் ஏற்க வேண்டியது இருக்கும். மத்திய அரசுமீது சொல்லப்படுகின்ற ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் பதில் சொல்ல எனக்கு எப்படிக் கடமை இருக்கிறதோ, அதைப்போல உங்களுக்கும் கடமை இருக்கிறது, அந்த அரசில் நீங்கள் இருக்கும் வரை. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-45*

எனவே, *52* ஆண்டுக் கால சரித்திரம் இருக்கிறது. அப்போது எனக்கு ஐந்து வயது. அந்தச் சரித்திரத்தை முழுமையாகச் சொல்லக்கூடிய ஒரு சில தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்று சொன்னால் நம்முடைய முதலமைச்சரும், பேராசிரியரும் இருக்கிறார்கள். *52* ஆண்டுக் கால சரித்திரம் அந்த மண்ணிலே என்ன நடந்தது; அந்த மண்ணிலே நடந்த கொடுமைக்கு எவ்வளவு தூரம் தமிழகத்திலே இருக்கின்ற தலைவர்கள், ஒரு கட்சித் தலைவர் மட்டுமல்ல; இங்கே தேசியத் தலைவர்கள் அதிலே பங்கேற்று இருக்கிறார்கள். திராவிட இயக்கங்களின் தலைவர்கள் பங்கேற்று

2009 ஜனவரி 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

இருக்கிறார்கள். பொதுவுடைமை இயக்கங்களுடைய தலைவர்கள் பங்கேற்று இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எல்லாம் அன்று ஒரேவொரு நோக்கம்தான் இருந்தது. என்ன நோக்கம் ? இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையை எப்படியாவது தீர்க்க வேண்டுமென்று. ஆனால் அன்றைக்கு இருந்தவர்களுக்கும் இன்றைக்கு இருப்பவர்களுக்கும் என்ன நோக்கம் என்று சொன்னால், இங்கே இதைச் சாக்காக வைத்துக்கொண்டு எப்படிப் பல அரசியல் கட்சிகளை பலவீனமாக்கலாம் என்கிற எண்ணம் சிலருக்கு இருக்கின்ற காரணத்தினால்தான், இலங்கைப் பிரச்சினையிலே இன்னும் நம்மால் நினைத்த அளவு அழுத்தமாகச் செயல்பட முடியவில்லை.

தயவுசெய்து வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் கட்சியைத் தனிமைப்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கை வருகிறது. இங்கே பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொன்னார்கள், காங்கிரசைக் குற்றஞ்சாட்டுகிறேன் என்று சொன்னார்கள். ஜீவாவைப் பற்றிச் சொன்னார்கள், நான் அவருக்கு தா. பாண்டியன், அவர்களுடைய மாநிலச் செயலாளருடைய வாசகங்களை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய இன்றைய மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் அவர்கள் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திலே காங்கிரஸ் கட்சி என்ன செய்தது என்பதை அவர் சொல்லுகிறார். தா. பாண்டியன் சொல்லுகிறார்; அதை நண்பர் சிவபுண்ணியத்திற்கு நான் நினைவுறுத்துவது கடமை என்று எண்ணுகிறேன். "செப்டம்பர் 28-ன் உடன்படிக்கையின்படி — யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்டு உணவுக்கே தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில் படகுகள்மூலம் உணவுப் பொருட்களை ராஜீவ் காந்தி அனுப்பினார். அதைக் கரை சேர விடாமல் இலங்கை அரசு தடுத்தது. இதைக் கண்டு வெகுண்ட ராஜீவ் காந்தி, இராணுவ விமானங்கள்மூலமே இலங்கைக்குச் சென்று உணவுப் பொருட்களைப் போட வைத்தார்." (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் சொல்லவில்லை. நண்பர் சிவபுண்ணியத்தினுடைய கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் சொல்லுகிறார்.

அடுத்துதான் முக்கியமான கட்டம். "இதை நான் ஒரு இந்தியன் என்று கண்ணை மூடிக்கொண்டு, தேச பக்தி என்ற பெயரால் நியாயப்படுத்தலாம் என்று இருந்தாலன்றி, இதை நியாயப்படுத்துவது சிரமம். சர்வதேச சட்டப்படி நடுநிலையாளர் யாரைக் கேட்டாலும்

கூசாமல், தயங்காமல் இதைப் பச்சையான ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்லுவார்கள்." இலங்கையிலே துன்புறுகின்ற தமிழர்களுக்கு, காங்கிரஸ் கட்சியினுடைய பிரதமர், இந்த தேசத்தினுடைய பிரதமர் ராஜீவ் காந்தி, நம்முடைய இராணுவ விமானத்தின்மூலம் உணவுப் பொட்டணத்தைப் போட்டதை நம்முடைய மரியாதைக்குரிய தா. பாண்டியன் சொல்லுகிறார், "இதை யார் கேட்டாலும் கூசாமல், தயங்காமல் பச்சையான ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்லுவார்கள். உலகமே ராஜீவ் காந்தியைக் கண்டித்தது. தமிழ்நாட்டு மக்களாகிய நாம் மட்டும்தான் பாராட்டினோம்." (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த கட்டமாகச் சொல்லுகிறார் அவர். "உதாரணமாக, காஷ்மீரில் உள்ள இசுலாமிய மக்களுக்கு சவுதி அரேபியா நாட்டு விமானமோ அல்லது பாகிஸ்தான் நாட்டு விமானமோ பறந்து வந்து காஷ்மீரில் உணவுப் பொட்டணங்களைப் போட்டால், இந்தியா பார்த்துக் கொண்டிருக்குமா? நாம் சிரித்து வரவேற்று இருப்போமா? இலங்கை போன்ற ஒரு சிறிய தீவு என்பதால், இந்தியா போன்ற வலிமை மிக்க நாடு, இலங்கையின் ஒரு பகுதியையும் இந்தியாவின் ஒரு பகுதியாகக் கருதி, ஈழத் தமிழர்களையும் இந்தியத் தமிழர்களாகவே கருதி, உதவி என்ற பெயரால் சர்வதேச சட்ட மீறல்களைச் செய்தது. தமிழர்களுக்காக சட்ட மீறல்களைச் செய்து நமக்காகப் பழியேற்றார் ராஜீவ் காந்தி." (மேசையைத் தட்டும் ஒலி)

இது முடிந்து சொல்லுகிறார், தா. பாண்டியன்; நான் சொல்லவில்லை. "இந்திய இலங்கை ஒப்பந்தத்தால் இதுவரை இலங்கைத் தமிழர்களுக்கு இல்லாது இருந்த ஒருசில உரிமைகள் கிடைத்தன. மேலும் சில உரிமைகள் கிடைக்க வழிவகுத்தன. உடனே கிடைத்துவிட வேண்டுமென எல்.டி.டி.இ.-யின் தலைமை, கருத்தை வெளியிட்டது; பின்னர், நடந்த தேர்தலைப் புறக்கணித்தது; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியுடன் ஒத்துழைக்க மறுத்தது; அந்த ஆட்சியைக் கலைக்கவும் சிங்கள அரசுடன் ரகசிய உடன்பாடு செய்து அவர்களிடமிருந்து ஆயுத உதவிகளைப் பெற்று இந்திய அமைதிகாப்புப் படையைத் தாக்கத் தொடங்கியது" என்று தா. பாண்டியன் சொல்கிறார்.

*முற்பகல் 10-50*

"எனவே, பரம வைரியுடன் சேர்ந்து கொண்டு, சொந்த சகோதரர்களையே கொல்வதற்குக் கூசாதவர்கள். இவர்களால் கொல்லப்பட்ட தமிழ்ப் போராளிக் குழுக்களின் தலைவர்கள்

2009 ஜனவரி 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

சிறி சபாரத்தினம், முகுந்தன், அமிர்தலிங்கம், பத்மநாபா என்ற பட்டியல், நீளமானது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்கலைக்கழகத் துணை வேந்தர், நாடாளுமன்ற உறுப்பினர், இதர அரசியல்வாதிகள் என இவர்களால் கொல்லப்பட்டவர்களின் பட்டியலும் நீளமானது. சிங்கள வெறியர்களால் கொல்லப்பட்ட தமிழர்களைவிட இந்த வெறிக் கும்பலால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கைதான் அதிகம்." (மேசையைத் தட்டும் ஒலி) இதைச் சொன்னது... (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கிட்டு யாரும் பேசாதீர்கள். மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கு. ஜெயக்குமார், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** எங்களது மாநிலச் செயலாளர் அவர்கள் எழுதிய புத்தகத்திலே இருக்கிற வாசகங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். குறிப்பாக அவர் சொல்லி வருவதெல்லாம், இலங்கையிலே தமிழர்களைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுப்பதைப்போன்ற கருத்துகளை இங்கே பதிவுசெய்து கொண்டிருக்கிறார். உணவுப் பொட்டணம் போட்டது, மற்ற காரியங்களைச் செய்ததிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து அல்ல. அந்த மாதிரியான கருத்துகள் . . . (குறுக்கீடு) இருங்கள், ஒரு நிமிடம். அதேபோல, இன்னொரு செய்தியைச் சொல்லுகிறபோது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்றைக்குமே தீவிரவாதத்தை ஏற்றுக்கொண்டதில்லை. அதிலே நாங்கள் தெளிவாக இருக்கிறோம். ஆகவே, அதன் காரணத்தினாலேயே விடுதலைப் புலிகளினுடைய தடித்த நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கவில்லை. விடுதலைப் புலிகள் என்ற காரணத்தை மட்டுமே காட்டி, அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கின்ற இந்தக் காரியங்களையெல்லாம் இணைத்துப் பேசி, அதிலே சாதுர்யமாகத் தப்பிக்கச் செய்து, அந்த அப்பாவி மக்களை தினசரி கொல்வதற்கு உதவிகரமாக நீங்கள் இருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய வேண்டுகோளே தவிர, நீங்கள் ஆதாரங்களைக் காட்டலாம். திரு. தா. பாண்டியன் அவர்களைப் பற்றிப் பேசுகிறபொழுது, ஒன்றே ஒன்று. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்படுகிறபொழுது, அன்றைக்கு அவரோடு கூடவே இருந்து குண்டடிப்பட்டவர் எங்களுடைய தோழர்

திரு. தா. பாண்டியன் அவர்கள். அன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் நீங்கள் பல பேர் அங்கே இல்லை, அது வேறு விஷயம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டபோது, அன்றைக்கு கை சின்னத்திலே வேட்பாளராக அவர் நிறுத்தப்பட்டார். அவர் அன்றைக்கு வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியிலே இல்லை. இதை நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் அன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சியிலே இல்லை. ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஒன்றைத் தொடங்கி, அதற்குத் தலைவராக இருந்து, திரு. ராஜீவ் காந்தி அவர்கள் எங்கெங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் சென்று, அவர் பேசியவற்றை மொழிபெயர்த்தார். நாங்கள் அங்கே இல்லை என்று நீங்கள் சொல்வது, மிகவும் வருந்தத்தக்கது. நாங்களெல்லாம் பக்கத்திலேதான் இருந்தோம். ஆனால், உயிரோடு இருக்கிறோம். நீங்கள் அதைப்பற்றி எல்லாம் பேச வேண்டுமென்று சொன்னால், ஒரு விவாதம் நடத்தவே நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எதற்காக இதைப் பதிவுசெய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்று சொன்னால், நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகின்றபோது, காங்கிரசைக் குற்றஞ்சாட்டிய காரணத்தினால் இதை நான் பதிவு செய்யவேண்டியதாக இருந்தது. இதை நான் பதிவுசெய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை. ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, இந்தக் கருத்திலே உடன்பாடோடு ஒட்டுமொத்தமானதொரு தீர்மானமாக இதை அனுப்பவேண்டுமென்ற ஒரு நினைவோடுதான் காங்கிரஸ் கட்சி இன்றைக்கு வந்தது. ஆனால், காங்கிரஸ் கட்சியை, இன்னும் சொல்லப்போனால், இதில் அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்துவதற்கு மட்டுமல்ல; காங்கிரஸ் கட்சியைத் தனிமைப்படுத்துவதால், இந்த அரசையே கவிழ்ப்பதற்கான ஒரு மறைமுக சதி நடக்கிறது, இலங்கைப் பிரச்சினையின் பெயரால். It is all in black and white.

2009 ஜனவரி 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

ஒரு தலைவர் பத்திரிகைக்குப் பேட்டி கொடுக்கிறார். "கலைஞர், காங்கிரஸ் கட்சிக்கு ஏன் இந்த அளவு மரியாதை அளிக்கிறார் என்று விளங்கவில்லை. ஒருவேளை காங்கிரசினால் ஆட்சியை இழக்க நேரிட்டால் ஈழத் தமிழர்களுக்காக மூன்றாவது முறையாக ஆட்சியை இழந்த பெருமை, உலகத் தமிழர்கள் மத்தியிலும், வரலாற்றிலும் கலைஞருக்குப் பதிவாகும்." இதுதான் அவர்களுடைய நோக்கம். இந்தப் பிரச்சினையை வைத்து, காங்கிரசைப் பலவீனப்படுத்தி, அல்லது காங்கிரஸ் கட்சியைத் தனிமைப்படுத்தி, காங்கிரஸ் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே இருக்கிற இந்தக் கூட்டை, இந்த ஆதரவைக் குலைய வைத்து, இந்த அரசை வீழ்த்தவேண்டும் என்பதுதான் சில பேருடைய நோக்கம். சில பேர், 'தீ, தீ, திருடன், திருடன்' என்று கத்துகிறபோது, 'திருடன், திருடன்' என்று சொல்லிக்கொண்டு வந்தே திருடிக்கொண்டு போகிறவர்களை நாம் பார்க்கிறோம். அந்த மாரீச மான்களை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏனென்றால், அவர் தண்ணீரிலே தடம் பார்க்கக்கூடியவர்.

*முற்பகல் 10-55*

இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த அவையிலே ஈழத் தமிழர் பிரச்சினையை மட்டும் துடைப்பது, ஈழத் தமிழர் பிரச்சினையை மட்டும் தீர்ப்பது, ஈழத் தமிழர் அவலத்தை மட்டும் நாம் தீர்ப்பது என்ற முடிவோடு நாம் இந்த அவையிலே இருந்தால், காங்கிரஸ் கட்சியைப் பலவீனப்படுத்தியோ, காங்கிரஸ் கட்சியைத் தனிமைப்படுத்தியோ பேசுவதைத் தமிழக அரசியல் கட்சிகள் நிறுத்திக்கொள்ள வேண்டும். நான் இந்த அவையிலே ஒரு சவாலாகச் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியின் ஆதரவு இல்லாமல், காங்கிரஸ் கட்சியின் தயவு இல்லாமல் ஈழத் தமிழர் பிரச்சினையை ஒருநாளும் தீர்க்க முடியாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே தமிழகத்தில் இருக்கின்ற . . . (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன். இதோ பாருங்கள், **I don't yield.** (குறுக்கீடு) **I don't yield.** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். அவர் பேசட்டும், உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் எதற்கு இந்த அவையிலே பதிவு செய்ய

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜனவரி 23

விரும்புகிறேன் என்று சொன்னால், இதைப்போன்ற தீர்மானத்தை நாம் எத்தனை முறை கொண்டுவரப் போகிறோம்? எத்தனை முறை இந்த அவை கூடி இந்தப் பிரச்சினையை விவாதிக்க இருக்கிறது? ஆளுநர் உரைமீது நாம் விவாதிக்க இருக்கிறோம். இன்னும் மூன்று, நான்கு நாட்கள் விவாதம் இருக்கின்றது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் நாம் ஒருநாள் இதற்காக முழுமையாக ஒதுக்கியிருக்கிறோம். இப்பொழுது மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்; மத்திய அரசினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அங்கே போகவேண்டும்; அவர் அங்கிருக்கின்ற இலங்கையினுடைய குடியரசுத் தலைவரிடம் பேச வேண்டும்; அங்கே ஒரு போர் நிறுத்தத்தைக் கொண்டுவர வேண்டும்; அங்கே அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்; போர் என்பது வழிமுறை அல்ல என்பதிலே காங்கிரஸ் கட்சிக்கு மாற்றுக் கருத்து இல்லை.

மத்திய அரசை வலியுறுத்துகின்ற அதே நேரத்திலே, மத்திய அரசு செய்யக்கூடிய பணிகளால், செய்யக்கூடிய முயற்சிகளால் ஏற்படக்கூடிய விளைவு, அதற்கு அடுத்த கட்டம், அருமையாகச் சொல்வார்கள்: "History repeats itself. First as a tragedy and second as a comedy." இது முதல் போர் நிறுத்தம் அல்ல; இது மூன்றாவது போர் நிறுத்தம். முதல் போர் நிறுத்தத்தைச் செய்தது யார்? இரண்டாவது போர் நிறுத்தத்தைச் செய்தது யார்? அந்தப் போர் நிறுத்தங்கள் தொடர்ந்து வந்த விளைவுகளால் இலங்கையில் அமைதி நிலவியதா? அருமைக்குரிய சகோதரர் திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசினாரே? இன்றுகூட செய்தி வருகிறதே ? 'தினத்தந்தி' யைச் சுட்டிக்காட்டினார் நம்முடைய மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. மணி அவர்கள். இன்று 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிறதே? "The United Nations office in Sri Lanka on Thursday slammed the LTTE for its refusal to allow its staff to return from the Wanni with the convoy that had gone there to deliver relief supplies to the displaced."

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 45 கோடி ரூபாய் திரட்டினார்கள். மத்திய அரசு இரண்டு முறையாக நிவாரணம் கொடுத்திருக்கிறது. அந்த நிவாரணப் பணி ஐக்கிய நாடுகள் அமைப்பு மூலமாக, செஞ்சிலுவைச் சங்கம்மூலமாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் போக வேண்டுமென்பதைச் சொல்லியே நாம் அனுப்பி வைத்திருக்கிறோம். ஆனால், அப்படி உதவிப் பொருளைக் கொண்டுபோன அந்த வாகனங்களுக்கு அனுமதி மறுப்பது யார்? குற்றஞ்சாட்டுவது யார்? ராஜபக்சே குற்றஞ்சாட்டுகிறாரா? இல்லை,

2009 ஜனவரி 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

சிங்களவாதிகள் குற்றஞ்சாட்டுகிறார்களா? ஐக்கிய நாடுகளுடைய சபை இன்று குற்றஞ்சாட்டியிருக்கிறது. நாம் அனுப்பிய பொருள்கள் அங்கே போய்ச் சேருவது இல்லை. "It said it had issued 'strongest possible protest to the LTTE'. The protest came amid pitched battles in Mullaithivu, the last stronghold of the Tigers and heightened concerns over the safety of the civilians trapped in the war zone." இதைச் சொல்வது யார்? செஞ்சிலுவைச் சங்கம் சொல்கிறது. ஐக்கிய நாடுகள் சபை அமைப்புகள் சொல்கிறது. நாங்களும் அதைத்தான் சொல்கிறோம்.

இலங்கை அரசுக்கு யுத்தத்தை நிறுத்துங்கள், குண்டுமழை பொழிவதைத் தவிருங்கள் என்று நாம் சொல்லுகின்ற அதே நேரத்திலே, relief materials, உதவிப் பொருள்களைக் கொண்டு போவதற்கு, பயங்கரவாத அமைப்பான எல்.டி.டி.இ.யும் அனுமதிக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய உரிமை நமக்கு இல்லையா? அந்த அப்பாவித் தமிழர்களைப் பாதுகாப்பது யார்? நாம்தானே அனுப்பி வைத்தோம்; மருந்து அனுப்பி வைத்தோம்; உணவுப் பொருள் அனுப்பி வைத்தோம்; 45 கோடி ரூபாய் பணம் கொடுத்து முதலமைச்சர் அவர்களே நேரடியாக தினசரி கையெழுத்திட்டு வாங்கி அனுப்பினார்; பாரதப் பிரதமர் அனுப்பினார். அந்தப் பொருள்கள் போய்ச் சேராமல், இன்னும் சொல்கிறார்கள் "In a statement, the ICRC" - International Committee of the Red Cross said: "It had been negotiating with the parties for the past three days to secure safe passage for 70 patients, some of them in a serious condition, to Vavuniya Hospital." 70 பேர் குற்றுயிரும் குலையுயிருமாக காயங்களோடு இருக்கின்றவர்களை, செஞ்சிலுவைச் சங்கம் தூக்கிக்கொண்டு அடுத்த மருத்துவமனைக்குக் கொண்டு போவதற்குக்கூட மூன்று நாட்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்களாம். இதற்கு யார் பதில் சொல்வது? இதற்கு யார் தீர்வு காண்பது? பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்த மக்களை நீங்கள் விட்டுவிடுங்கள் என்று நாம் விடுதலைப் புலிகளைக் கேட்கக்கூடாதா? உணவுப் பொருள்களையும் மருந்துகளையும் கொண்டுபோக அனுமதியுங்கள் என்று நாம் கேட்கக்கூடாதா? அதைக் கேட்கின்றபோது எங்களைத் தமிழர் விரோதி என்று சொன்னால், அதைக் காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டுமா? அல்லது நீங்கள் சொல்ல நினைக்கிற போர்வையிலே இந்த ஆட்சியைப் பலவீனப்படுத்துவதற்கு, காங்கிரசைப் பலவீனப்படுத்துவதற்கு நீங்கள் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தினால் நாங்கள் வாய்மூடி மவுனியாக இருக்க வேண்டுமா? என்ன நியாயம்? What is your agenda? இந்த இலங்கைப் பிரச்சினையைப் பற்றி பேசுகின்ற, தமிழகத்தில் இருக்கின்ற பல

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜனவரி 23

அரசியல் கட்சிகளைக் கேட்கின்றேன். Come clean. சுத்தமாக வாருங்கள். இலங்கையில் அப்பாவித் தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்கிற ஒரே உணர்வோடு வாருங்கள். காங்கிரஸ் கட்சி முன்நின்று, மார்தட்டி தலைமை ஏற்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உங்களில் அநேக பேர்களுக்கு மனது சுத்தமாக இல்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தா. பாண்டியன் அவர்கள் அன்றைக்குப் பேசும்போது சொன்னார்கள். பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை ஒன்றினைக் கொடுத்தபோது, அந்த அறிக்கையைப் பார்த்தவுடனே, திரு. தா. பாண்டியன் சொல்கிறார்: 'அம்மையார் சொல்வது உண்மையென்றால், நாம் அங்கேயே நேரில் போய்ப் பார்த்து வரலாமா?" என்கிறார். போங்களேன். 'விடுதலைப் புலிகள், அங்கேயிருக்கின்ற அப்பாவித் தமிழர்களை மனிதக் கேடயங்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; அதனால், அங்கே பெரிய இடைஞ்சலாக இருக்கிறது' என்று சொன்னவுடனே, அதை நீங்கள் கேட்கவில்லையே ? (குறுக்கீடு)

*முற்பகல் 11-00*

**திரு. வை. சிவபுண்ணியம்:** தப்பு என்று சொல்லியாகிவிட்டது. நீங்கள் தப்பாகச் சொல்கிறீர்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** எப்போது அதைத் தப்பு என்று சொன்னீர்கள்? (குறுக்கீடு) உங்களுக்கு அதையெல்லாம் தப்பு என்று சொல்லக்கூடிய தைரியம் கிடையாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஏன் கிடையாது. இல்லை, இல்லை. (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதனால், தமிழகத்திலே இருக்கின்ற சில அரசியல் கட்சிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. க. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குணசேகரன், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அது தவறான செய்தி...

2009 ஜனவரி 23]

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அது ஒரு தவறான செய்தி அல்ல. நீங்கள் என்ன சொன்னீர்கள் என்றால்... (குறுக்கீடு) நான் சொல்கிறேன்; நீங்கள் சொல்கிற ஸ்டேட்மென்ட் என்னவென்றால், அவர்கள் சொல்வது உண்மையாக இருக்கும் என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கு அரசியல் கட்சிகள் சேர்ந்த ஒரு குழுவை அனுப்பலாம்; அதிலே அவர்களே தலைமையேற்று, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த ஒருவர்கூட அதிலே இடம்பெறலாம் என்றுதான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்களேயொழிய, நீங்கள் வெளியிலே எடுத்திருக்கின்ற அரசியல் நிலைப்பாட்டை அவர்களிடம் தைரியமாகச் சொல்வதற்கான மன உறுதியோ, தைரியமோ உங்களுக்கு இல்லை என்பதைத்தான் நான் சொல்கிறேன். நான், நீங்கள் மறுக்கவில்லையென்பதைச் சொல்லவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து... (குறுக்கீடு)

**திரு. க. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் திரு. சிவபுண்ணியம். திரு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பேசி முடித்தவுடனே, நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு கோணத்திலே இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் நமக்கு ஒரு கோணம் இருக்கின்றது. இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்கு ஒரு கோணம் இருக்கிறது. மத்திய அரசுக்கு ஒரு கோணம் இருக்கிறது. ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் ஒரு கோணம் இருக்கிறது. இலங்கையில் நடக்கின்ற ஒரு பிரச்சினை அவர்களை மட்டும் பாதிப்பது இல்லை. ஏனென்று சொன்னால், We don't get our

neighbours by choice. நம்முடைய அண்டை வீட்டுக்காரர்களை நாம் தேர்ந்தெடுத்துக்கொள்வதில்லை. வரலாறு இருக்கின்ற அளவிற்கும், இந்த நிலப் பரப்பு இருக்கின்ற அளவிற்கும் நாமும் இலங்கையும் அண்டை நாடுகளாக இருந்தேயாக வேண்டும். அப்படி அண்டை நாடுகளாக இருக்கின்றபோது, 'அங்கே பாதுகாப்பிற்காக இராணுவத்தை அனுப்பினார்கள்; விமானம் போனது' என்றெல்லாம் சொன்னார்கள். அதுபோன்ற தகவல்களை தயவுசெய்து, பொறுப்பின்றிச் சொல்லக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு சிறிய தகவலை மட்டும் நான் சொல்கிறேன். "Colombo slams claim on U.S. bases: The Sri Lankan Government on Thursday rejected a claim made by a JVP parliamentarian that a team of officials from the U.S. Pacific Command visited the island nation recently to explore the possibility of installing US missiles in Trinconamalee." திரிகோணமலையிலே, அமெரிக்க ஏவுகணைகளைக் கொண்டு வந்து வைப்பதற்காக, அதைப் பார்ப்பதற்காக அமெரிக்க இராணுவத்தினுடைய Pacific Command என்று சொல்லக்கூடிய கடற்படை அதிகாரிகள் வந்திருக்கிறார்கள் என்கின்ற தகவலை நாம் சொல்லவில்லை. இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் JVP கட்சி உறுப்பினர் சொல்கிறார். இந்திய அரசுக்கு நம்முடைய பாதுகாப்பினை உறுதி செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. நம்முடைய கடற்கரையிலே என்ன நடக்கிறது; நம்முடைய அண்டை நாடுகளிலே என்ன நடக்கிறது; நமக்குப் பக்கத்திலே இருக்கின்ற நாடுகளிலே என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக இந்திய இராணுவமும், இந்திய உளவு அமைப்பும் நம்மைச் சுற்றியுள்ள நாடுகள் முழுவதையும் கண்காணிக்கின்றன. நீங்கள் அதனை இதோடு சேர்த்துக் கொச்சைப்படுத்தினால், இந்தியப் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கின்ற மிகப் பெரிய பழியை நீங்கள் சுமப்பீர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

இந்தியாவினுடைய இறையாண்மை, இந்தியாவினுடைய பாதுகாப்பு, ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு இந்திய இராணுவமும், இந்திய உளவுத் துறையும் எடுக்கின்ற முயற்சியை நீங்கள் சொந்த அரசியலுக்காக, அரசியல் இலாபத்திற்காக இதை இலங்கைப் பிரச்சினையோடு இணைத்தால், இந்தியாவினுடைய பாதுகாப்பு மிகப் பெரிய கேள்விக்குறியாகிவிடும்.

2009 ஜனவரி 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

இந்திய-இலங்கைப் பிரச்சினையிலே, ஜெயவர்த்தனே-ராஜீவ் ஒப்பந்தத்தைத் தவிர, மாற்றுத் தீர்வேயில்லை இன்றுவரை. நாம் படித்துப் படித்துச் சொன்னோம். இந்திய-இலங்கை உடன்பாட்டில் தமிழ்த் தாயகம் என்ற நீண்ட நாளைய கோரிக்கை ஏற்கப்பட்டு இலங்கையின் மூன்றில் ஒரு பங்கு நிலப் பரப்பில் பரவியுள்ள வடக்கு, கிழக்கு மாகாணம் ஒன்றாக இணைக்கப்பட்டு, இந்தியாவிலுள்ள மாகாணங்களைப்போல ஒரே மாநில நிருவாக சுயாட்சியுடன்கூடிய அரசு உருவாக வழி ஏற்படுத்திக் கொடுத்தோம். (குறுக்கீடுகள்) யார் ஏற்படுத்திக் கொடுத்தது? (குறுக்கீடுகள்) கிடையாது. எப்படி வந்தது? இன்றும் நீங்கள் சொல்லுங்கள். இன்றும் நீங்கள் சொல்லுங்கள். இன்று, இந்த அவையிலே யாராவது பொறுப்பு எடுத்துக் கொள்ளுங்கள்; ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை இலங்கையில், விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்வார்கள்; அதற்கு நாங்கள் உத்தரவாதம் தருகிறோம்; அந்த ஆயுதங்களை நாங்கள் கிழே போடச் சொல்லுகிறோம்; சர்வதேச மேற்பார்வையிலே அந்த ஒப்பந்தத்தை நாம் நிறைவேற்றுவோம் என்று நீங்கள் யாராவது உறுதிமொழி கொடுத்தால், முதலமைச்சர் அவர்கள் தைரியமாகப் பேசுவார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அந்த மாகாணத்திற்கே நீங்கள் சொல்லுகிற, விடுதலைப் புலிகள் சொல்லுகிறவர்தான் தலைமை நிருவாக அதிகாரி என்பதை ஜெயவர்த்தனே ஒத்துக்கொள்ள மறுத்தார். ஆனால், பிரதமர் ராஜீவ் காந்தி, அவரைக் கட்டாயப்படுத்தி, விடுதலைப் புலிகள் கொடுக்கின்ற மூன்று பேரில் ஒருவரைத்தான் தலைமை நிருவாக அதிகாரியாகப் போட வேண்டுமென்று ஜெயவர்த்தனேவைக் கட்டாயப்படுத்தினார். அந்தக் குழுவிலே விடுதலைப் புலிகளுக்குத்தான் மெஜாரிட்டி. அப்போது தமிழ் தேசிய ஐக்கிய முன்னணிக் கட்சிகள் எல்லாம் இருந்தன. தேர்தலிலே அவர்கள்தான் வெற்றி பெற்றிருந்தார்கள். விடுதலைப் புலிகள் எந்த இடத்திலும் வெற்றி பெறவில்லை. ஆனால், வெற்றி பெற்ற மக்கள் பிரதிநிதிகளைத் தள்ளி வைத்துவிட்டு, விடுதலைப் புலிகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள் என்று ராஜீவ் காந்தியே நேரடியாகத் தலையிட்டு ஒத்துக்கொள்ளச் செய்தார், 9-ல் 6 பேர்.

தமிழகத்திலே தமிழக முதலமைச்சருக்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ, தமிழகச் சட்டப் பேரவைக்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ, அதே அதிகாரத்தைக் கொண்ட முதலமைச்சராக உங்களையே ஆக்குகிறோம் என்று நாங்கள் சொன்னோம். தமிழை ஆட்சி மொழி என்று ஒத்துக்கொண்டார், இந்திய-இலங்கை ஒப்பந்தத்திலே. இன்றும் அது ஒன்றும் காலாவதியாகிவிடவில்லை.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜனவரி 23

52 ஆண்டுகள்; எனக்குத் தெரியும். தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள், நம்முடைய முதலமைச்சரை அழைத்து, நீங்களே நேராகப் போய் பேசி வாருங்கள் என்று சொல்லி, நம்முடைய முதலமைச்சரும் புறப்படத் தயாராக இருந்தபோது, முதலமைச்சரை இலங்கைக்குப் போகவிடாமல் நடந்த சம்பவங்கள் என்ன என்பது மனச்சாட்சி உள்ளவர்களுக்குக் குத்தும் அது. (குறுக்கீடுகள்) எது பொய்? முதலமைச்சரிடம் நம்முடைய தலைவர் ராஜீவ் காந்தி சொன்னார்: "இந்தப் பிரச்சினையை வேறு யாரும் தீர்க்க முடியாது; நீங்களே நேரடியாகப் போய் அவர்களை அழைத்துப் பேசி, அவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதைச் செய்து கொடுக்கலாம்; நீங்கள் போய்ப் பேசி வாருங்கள்" என்று சொன்னவுடனே, நம்முடைய முதலமைச்சரும் மிகுந்த தயக்கத்திற்குப் பிறகு ஒத்துக்கொண்டு, பயணத்திற்குத் தயாராக இருந்தபோது, அந்தப் பயணம் நடந்தால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் தீர்ந்துவிடும்; ஒரு மிகப் பெரிய வரலாற்றுப் புகழ், தலைவர் கலைஞருக்குக் கிடைக்கும் என்பதை நினைத்து, அந்தப் புகழைக் கெடுப்பதற்கான சதி செய்தது யார் என்பதெல்லாம் இன்று வரலாறு. அதற்குப் பிறகுதான் ராஜீவ் காந்தி கொலை. ராஜீவ் காந்திக்காக, ராஜீவ் காந்தி கொலைக்காக இங்கே அப்பாவி தமிழர்களை நாங்கள் கவனிக்கவில்லை, பார்க்கவில்லை என்று தயவுசெய்து யாராவது நினைத்துவிடக் கூடாது. ராஜீவ் காந்தியினுடைய கொலை என்பது எங்கள் வாழ்நாள் முழுவதும் எங்கள் நெஞ்சை உறுத்துகின்ற செய்தி. ஆனால், அதையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு, அந்தத் துன்பியல் சம்பவத்தை எல்லாம் தள்ளிவைத்துவிட்டு, அங்கே வாழ்கின்ற அப்பாவித் தமிழர்களுடைய கண்களைத் துடைப்பதற்குக் காங்கிரசின் கைகள் என்றும் தயாராக இருக்கின்றன; எப்போதும் தயாராக இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய வேண்டுகோள் எல்லாம், அதற்கான முயற்சிகளிலே எந்தவிதமான மறைமுகமான முகமூடி இல்லாமல் நீங்கள் சுத்தமாக வரவேண்டும் என்பதுதான். 52 ஆண்டுகள் வரலாற்றை உணர்ந்து, ஏறக்குறைய 70 ஆண்டுக் கால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சி வெற்றிபெற வேண்டும். மத்திய அரசுக்குச் சில நிருவாக நெருக்கடிகள் இருக்கலாம். அதையெல்லாம் மீறி, அப்பாவித் தமிழர்களின் பிரச்சினைகளை நாம் துடைக்க வேண்டும். அங்கே யுத்தத்தை நாம் நிறுத்த வேண்டும். அங்கே அமைதி நிலவ வேண்டும். அதற்கு நாம் எல்லோரும் நம்முடைய அரசியல் ஆடைகளை எல்லாம் களைந்துவிட்டு,

2009 ஜனவரி 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நம்முடைய அரசியல் ஆசைகளையெல்லாம் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, அதிகார ஆசைக்கு சற்று விடுதலை கொடுத்து, தமிழனின்மேல் கவனம் என்றுதான் நாம் அந்தப் பிரச்சினையைப் பார்க்கவேண்டுமேயொழிய, தயவுசெய்து காங்கிரஸ் கட்சியைத் தனிமைப்படுத்தி, காங்கிரஸ் கட்சியைப் பலவீனப்படுத்தி, இந்த ஆட்சியை பலவீனப்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தோடு இதிலே பேசுகின்ற, இங்கே பங்கேற்கின்ற தலைவர்கள் பேசக்கூடாது.

*முற்பகல் 11-10*

ஏனென்று சொன்னால், தமிழகத்திலே உண்ணாவிரதம் என்கிற பெயரிலே, அருமைக்குரிய சகோதரர் திருமாவளவன் அவர்கள், இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசுகின்ற வார்த்தைகளை நான் மிகவும் வருத்தத்தோடு பார்க்கிறேன். இங்கே பஸ்களுக்குத் தீ வைக்கிறார்கள். இலங்கையிலே வாழ்கிற தமிழர்களைப் பாதுகாப்பதற்காகத் தமிழகத்திலே வாழ்கின்ற தமிழர்களை எரிப்பீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பேசுகின்றபோது என்ன சொல்கிறார்? "காங்கிரஸ் பரவாயில்லை என்று சொல்வதற்குக் காரணம், தமிழகத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ் கட்சி, தலைவர்கள் மட்டுமே உள்ள கட்சியாக இருக்கிறது. வாக்கு வங்கி இல்லாத கட்சி. அவர்களைவிட பல மடங்கு வலிமையான கட்சி விடுதலைச் சிறுத்தைகள் கட்சிதான்" என்று சொன்னார். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லையே உங்களை. நீங்கள் போய் பிரதமர் ஆகுங்கள்; உள் துறை அமைச்சர் ஆகுங்கள். "காங்கிரசுக்கு பம்பர் லாட்டரி அடிக்கிறது. காங்கிரஸ் தனித்து நின்றால், ஒரே ஒரு எம்.பி. சீட் கூட பெற முடியாது. காங்கிரசைத் தனிமைப்படுத்திவிட்டால், தமிழ் ஈழத்திற்கு எதிராக அவர்களால் வாய் திறக்க இயலாது." கடைசியாக அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? "ஆகவே, கலைஞர் அவர்கள் காங்கிரஸ் ஆதரவை நீக்கிக்கொள்ள வேண்டும்." இதுதான் உங்களுடைய நோக்கம். இதை நான் சொல்லவில்லை. நீங்கள்தான் பத்திரிகைக்குப் பேட்டிக் கொடுக்கிறீர்கள். இப்படி ஒருவித எண்ணத்தை மனதிலே வைத்துக்கொண்டு, இந்தப் பிரச்சினையை அணுகினால் தமிழர்களின் துயர் எப்படித் துடைக்கப்படும்? ஆகவே, எல்லோரும் பொறுப்புள்ள அரசியல் கட்சிகளாக, பொறுப்புள்ள தலைவர்களாக வாருங்கள். தமிழர்கள்மேல் அக்கறைகொண்ட தலைவர்களாக வாருங்கள். தயவுசெய்து காங்கிரசைப் பலவீனப்படுத்த வேண்டும்; காங்கிரசைக் கொச்சைப்படுத்த வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், வரலாறு மட்டுமல்ல; இலங்கைத் தமிழர்களுக்கே நீங்கள் செய்த மிகப் பெரிய

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜனவரி 23

துரோகமாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, முதலமைச்சர் அவர்கள் கொண்டுவருகின்ற, போர் நிறுத்தம் வேண்டும் என்கிற தீர்மானத்தையும், மத்திய அரசு இதில் தலையிட வேண்டும் என்கிற தீர்மானத்தையும், இதிலே அவசரம் காட்டி, இலங்கைத் தமிழர்களின் துயரைத் துடைப்பதற்கு எல்லோரும் மார்தட்டி முன்வர வேண்டும் என்று அவர்கள் கொண்டுவருகின்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் கட்சி மனப்பூர்வமாக ஆதரிக்கிறது; அவர்களோடு இருக்கிறது; அவர்களுக்கு ஆதரவு தரும் என்று சொல்லி அமைகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன். (குறுக்கீடு) No, Sir. உட்காருங்கள். (குறுக்கீடு) ஒவ்வொருவரும் எழுந்து பேசிக்கொண்டே இருக்க முடியாது. (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், நீங்கள் ஆரம்பியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், ஒவ்வொருவரும் எழுந்து நின்று பேசிக்கொண்டிருந்தால் நேரம் போதாது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை.No, No. (குறுக்கீடு) கடைசியிலே வாய்ப்பு தருகிறேன். பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற இலங்கைவாழ் அப்பாவித் தமிழ் மக்கள் இலங்கையிலே ஏற்பட்டிருக்கிற போரால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிற நிலை குறித்து, எல்லோரும் அவரவர்களுடைய கருத்துகளை இங்கே வழங்கியிருக்கிறார்கள். குறிப்பாக, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் இங்கே பேசுகிறபோது, காங்கிரஸ் கட்சி மட்டும் மத்தியிலே ஆளவில்லை; நாம் அனைவரும் ஆண்டுகொண்டிருக்கிறோம் என்று இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். இங்கேயும் நீங்கள் கூட்டணியிலே இடம்பெற்றிருக்கிறீர்கள். தீர்மானங்களை நாம் ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறோம். அனைத்துக் கட்சிகளையும்

2009 ஜனவரி 23] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

கூட்டி தீர்மானங்கள் ஒருமனதாகவும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரையும் கூட்டி ஒருமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மனிதச் சங்கிலி என்ற பெயரில் தமிழ்நாட்டிலே பல்வேறு இடங்களிலே மனிதச் சங்கிலி மூலம், இலங்கையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற போர் நிறுத்தப்பட வேண்டும்; இலங்கையிலே வாழ்கிற அப்பாவித் தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக வலியுறுத்தி இருக்கிறோம். அதற்குப் பிறகு நாம் என்ன செய்திருக்கிறோம் என்று சொன்னால், ஒரு குறிப்பிட்ட கால அளவை வைத்து *31-10-2008*-க்குப் பிறகு, மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று சொன்னால், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய பதவியை நாம் ராஜினாமா செய்து விடுவோம் என்று முடிவுகள் மேற்கொண்டதற்குப் பிறகு, ராஜினாமா கடிதத்தைக்கூட முதலமைச்சர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, ஏதாவது முற்றுப்புள்ளி ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இன்று வரையிலும் அப்பாவித் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அப்பாவித் தமிழ் மக்களுக்காக நாங்கள் கண்ணீர் சிந்துகிறோம்.

*முற்பகல் 11-15*

தமிழ்நாட்டிலே வாழ்கிற மக்கள் மட்டுமல்ல; உலகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிற அத்தனைத் தமிழர்களும் இன்றைக்குக் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையிலேகூட மத்தியிலே இருக்கிற அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் இங்கே வருகை தந்து முதலமைச்சரைச் சந்தித்துப் பேசினார் என்ற கருத்துகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. என்ன பேசினார் என்பது இதுவரையிலும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதற்குப் பிறகு, வெளியுறவுத் துறைச் செயலர் அவர்கள் இலங்கைக்குச் சென்று இலங்கை அதிபரைச் சந்தித்திருக்கிறார்கள்; என்ன நடைபெற்றது என்பதும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. இலங்கையிலே வாழ்ந்துகொண்டிருக்கிற அப்பாவித் தமிழ் மக்கள் பாதிக்கிறபோது, அந்த அப்பாவித் தமிழ் மக்களுக்காக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களுடைய கண்ணீர் துடைக்கப்பட வேண்டும் என்பதிலே அழுத்தம் திருத்தமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2009 ஜனவரி 23

காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா அவர்கள் இங்கே சொல்கிறபோது, நாங்கள்தான் அதற்கு முடிவை எடுத்துத் தீர வேண்டும் என்றும், இந்தியாவில் வேறு எவராலும் எடுக்க முடியாது என்றும் சொன்னார்கள். அதற்கு ஒரு முடிவை ஏன் இன்றுவரையிலும் உங்களால் எடுக்க முடியவில்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பக்கத்திலே இருக்கிறவரிடம், கூட்டணியில் நீங்களும் இடம் பெற்றிருக்கிறீர்கள் என்று பேசுவதைக் காட்டிலும், இன்றைக்கு நீங்கள் ஏன் இந்த முடிவுகளை மேற்கொள்ளவில்லை; இதற்கு ஏன் இந்த அரசு வலியுறுத்தவில்லை என்பதைத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். ஆகவே, இது ஒரு நாடகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, அங்கே இருக்கிற, கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிற இலங்கைத் தமிழர்களுக்காக நாம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை இன்றுவரையிலும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைத்தான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே, தீர்மானங்களால் என்ன நடைபெறப் போகிறது? இதற்கு முன்னாலே ஒருமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதற்கு முன்னாலே அனைத்துக் கட்சிக் கூட்டங்களும் நடைபெற்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ராஜினாமா செய்து விடுகிறோம் என்று முதலமைச்சர் கையிலே கொடுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு இந்த மத்திய அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது? அதற்காக இந்த அரசாங்கம் என்ன வலியுறுத்திக்கொண்டிருக்கிறது என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மத்தியில் இருக்கின்றவர்களும், மாநிலத்தில் இருக்கின்றவர்களும் கூட்டணி அமைச்சரவை அங்கே இருக்கிறது என்று வலியுறுத்தியதற்குப் பிறகு, மத்தியிலே இருக்கிற அரசாங்கம் உடனடியாக இலங்கை அரசோடு பேசி, அங்கே போர் நிறுத்தத்தைச் செய்து, இலங்கையிலே வாழ்ந்துகொண்டிருக்கிற தமிழ் மக்களுக்கு, அங்குள்ள சிங்களர்களுக்கு எப்படி உரிமைகள் வழங்கப்படுகின்றனவோ, அந்த உரிமைகளை, அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிற இலங்கைத் தமிழர்களுக்கும் அந்த உரிமைகளை ஏன் கொடுக்கவில்லை என்பதை உங்களால் ஏன் வலியுறுத்த முடியவில்லை என்பதை மட்டும்தான் இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறோம். ஆகவே, நாடகத்தை நடத்திப் பயனில்லை.

2009 ஜனவரி 23] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

இலங்கையிலே வாழ்கிற ஏழையெளிய தமிழ் மக்கள் கண்ணீர் சிந்துவதைத் துடைப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்றுப் பேசிய, நம்முடைய சிறந்த நாடாளுமன்றவாதி, சிறந்த பேச்சாளர் அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். ஒரேவொரு வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 70 தமிழர்கள் குற்றுயிரும் குலையுயிருமாகப் பாதிக்கப்பட்டார்கள், அவர்களைக் கொண்டு சென்று மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு அங்குள்ள போராளிகள் அனுமதிக்கவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது, ஆயிரமாயிரம் அப்பாவித் தமிழர்களை, இலங்கை இராணுவத்தினர் கொத்து கொத்தாகக் குண்டுபோட்டு, ஈழத் தமிழர்கள் வயிறு பிதுங்கி, குழந்தைகளுடன் செத்து மடிந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பச்சிளங் குழந்தைகளையும், அப்பாவித் தமிழர்களையும் மருத்துவமனையிலே சேர்த்து சிகிச்சை அளிக்கின்றபோதே, சிங்கள ராஜபக்சே இனவாத அரசு, அங்கேயும் கொத்துக் கொத்தாகக் குண்டுகளைப் போட்டு, கொன்று குவித்துக்கொண்டிருக்கிறது. உங்களுடைய உரை என்பது, உங்களுடைய பேச்சு என்பது, எப்படி அங்கேயிருக்கிற அப்பாவித் தமிழர்கள் காக்கப்பட வேண்டும் என்பதை உணர்த்தியதோ அதேபோல், "இந்து" பத்திரிகையும், இன்னும் சில பத்திரிகைகளும் வேண்டுமென்றே அங்கே நடப்பதைப் பொய்யான, தவறான செய்திகளாகச் சொல்கின்றன, மனிதக் கேடயமாக தமிழ் மக்கள் அங்கே பயன்படுத்தப்படுகிறார்கள் என்று. அது அல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்கிற கருத்தை திரு. ஜி.கே. மணி அப்போதே பேசிவிட்டார், உட்காருங்கள். (குறுக்கீடு) No, no. திரு. வேல்முருகன், போதும், போதும். (குறுக்கீடு) சும்மா இருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.